## புதுக்கோட்டை ஸமஸ்தான

# தேசிய யுத்த முன்னணி நிலயம்.

---

பிரசுரம்] 1943-ம் ௵ மேமீ 22உ [ந. 147

---

பிரஸங்கம் CXLVII.

# ருஸியா தினக்கொண்டாட்டம்—மேமீ 21, 1943.

## புதுக்கோட்டை டவுன் ஹாலில் பொதுக்கூட்டம்.

### ஸர் அலெக்ஸாண்டர் டாட்டன்ஹாம், C. I. E., அட்மினிஸ்ட்ரேட்டர் அவர்களின் சொற்பொழிவு.

**சீமான்களே, சீமாட்டிகளே !**

நான் பலமுறை சொன்னதுபோல், இந்த யுத்தத்தை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். விபத்துக்குமேல் விபத்தாக வந்த காலம் ஒன்று. அப்போதும் யுத்தத்தின் இறுதி வெற்றி யாருக்கு என்பதில் என்னைப்போல் நம்பிக்கையை இழக்காதவர்கள் இருந்தார்கள். நாம் ஆயத்தமாக இல்லாத சமயத்தில் நம்மை யுத்தத்தில் ஜெர்மனி இழுத்தது. எண்ணிறந்த ஆட்களையும், ஏராளமான உபகரணங்களையும் ஜெர்மனி வருஷக்கணக்காகத் தயாரித்து வந்தது. நவீன யுத்த முறையின் முடிவு விமானப் படையின் வல்லமையையும், திறமையையும் பொறுத்ததென்று உங்களுக்குத் தெரியும். ஜெர்மனி பலத்த விமானப் படையை வளர்த்தது. பலத்த நீர்மூழ்கிக் கூட்டத்தையும் வளர்த்தது. அது இப்பொழுதும் நமது கப்பல்களுக்கு யமனாக இருக்கிறது. பிரான்ஸ் உட்கார்ந்து போனது, டங்கர்க், நார்வே போன்ற பயங்கரமான நாட்களும் இருந்தன. ஒவ்வொரு தேசமாக எதிரியின் வசமாகி வந்தது. ஜெர்மனியையும் அதன் நேசதேசங்களையும் நாம் தனியே எதிர்க்கவேண்டியதாயிற்று.

2. இரண்டாவது பகுதியில் ருஷ்யா, அமெரிக்கா, சைனா, போன்ற வலிமை வாய்ந்த தேசங்கள் நமது பக்கம் சண்டை போடலாயின. நாம் தற்காப்பு செய்து கொண்டால் போதுமென்றிருந்தோம். ஆனால் தனியே இல்லாமல், வலுத்த, சலியாத நேசதேசங்களோடு கூடி இருந்ததால் நிலைமை முற்றிலும் மாறிவிட்டது. ஆனால் யுத்தத்தின் போக்கு மேம்பாடு அடைவதாகத் தெரியவில்லை. நம்மைப்போலவே இவ்வளவு பெரிய யுத்தத்தை எதிர்ப்பதற்குத் தயாராக இல்லாத ருஷ்யர்கள் தங்கள் தேசத்தில் மேலும் மேலும் உள்ளுக்கு வாங்கவேண்டி இருந்தது. லெனின்கிராட்டின் விதி இப்படியோ அப்படியோ என்று இருந்தது. எண்ணெய்ச் சுரங்கங்களோடு கூடின காகஸஸை நோக்கி ஜெர்மானியர்கள் முன்னேறின வண்ணமாக இருந்தார்கள். வட ஆபிரிக்காவில் ரோமல் தலைமையின் கீழ் ஜெர்மானியர்கள் அலெக்ஸாண்டிரியாவுக்கு 70 மைல் அப்பாலுள்ள எல் அலாமீனில் இருந்தார்கள். தூரக்கிழக்குப் பிராந்தியத்தில் ஒரு தேசத்திற்குப்பின் ஒன்றாக ஜப்பானியர்கள் வந்து இறங்கினார்கள்.

3. இந்த காலத்தில் நான் மீட்டிங்குகளில் பேசும்பொழுதெல்லாம் "சில்லரை நிகழ்ச்சிகளைக் கவனிக்காதே, பெரும் நிகழ்ச்சிகளையும் கவனிக்காதே. நிகழ்ச்சிகள் எந்த வழியில் நடைபெறுகின்றன. நீண்ட நோக்கத்துடன் அது என்ன ஆகும் என்று ஆராய்ந்து பார்" என்றே சொல்லிக்கொண்டு வந்தேன். அந்தப்படி செய்தவர்கள் முடிவில நமக்குத்தான் வெற்றி என்று சந்தேகமில்லாமல் நம்பி வந்தார்கள்.

4. இப்போது யுத்தத்தின் மூன்றும் பகுதியில் இறங்கி இருக்கிறோம். எல்லாம் தலைகீழாக மாறிவிட்டது. அச்சுநாடுகள் எல்லா இடத்திலும் தற்காப்பில் இருக்கிறார்கள். நாம் முன்னேறி வருகிறோம். அடிக்கடி நான் சொல்லியிருக்கிறேன். "உடும்பு வேண்டாம், கையைவிடு" என்று ஜெர்மானியர்கள லெனின்கிராடைவிட்டு தலைகூட தப்பாமல் நொறுக்கடியாய் அடிபட்டு மாண்டார்கள். எதிரியின் பெரிய தளகர்த்தர்கள் சிலர் உள்பட ஏராளமான துருப்புகள் கைதியானார்கள். அல்லது கொல்லப்பட்டார்கள். யுத்த உபகரணங்களை ஏராளமாக இழந்தார்கள். ஜெர்மானியர்களுடைய முற்றுகையில் இருந்த லெனின்கிராட்டுக்கு விமோசனம் கிடைத்தது. சென்ற வருஷத்தின் கோடை யுத்தத்தில் தாங்கள் இழந்த பூமியை மாரிகால யுத்தத்தில் ருஷ்யர்கள் திருப்பிப் பிடித்துக்கொண்டார்கள். யூக்ரேன் என்ற கோதுமைப் பிரதேசத்திலிருந்தும், மதிக்கத்தக்க காகஸஸ் எண்ணெய்ச் சுரங்கங்களிலிருந்தும் எதிரி துரத்தப்பட்டுவிட்டான். நோவாரோஸிஸ்க் என்பது கருங்கடல் கரையில் ஒரு முக்கியமான துறைமுகம். அவ்விடத்தில் ஜெர்மானியர்கள் கடலைக் கடந்து காகஸஸ் போகலாம். அந்த நோவாரோஸிஸ்க் ஜெர்மானியர் கையிலிருந்து சீக்கிரத்தில் பிடுங்கப்படும். ருஷ்யர்கள் இப்போது எதிரியைத்தாக்க முன்னேறக்கூடிய நிலைமையில் இருக்கிறார்கள். தங்கள் விமானப் படைகளை எதிரியின் அணிவகுப்பிற்குப் பின்னால் அனுப்பி, ருஷ்யாவில் எதிரி வசமாக உள்ள எதிரியின் போக்குவரத்து உயிர் நிலைகளை எதிர்க்கக்கூடும். சமீபத்தில் ருஷ்யர்கள் வார்ஸாவையும், கீழ பிரஷ்யாவில் இன்ஸ்டர்பர்க்கையும்கூட விமானப் படையெடுத்து வெடி குண்டுகளைக்கொண்டு தாக்கினார்கள்.

5. வட ஆபிரிக்காவில் எல் அலாமீனிலிருந்து யுத்த நிலைமை மாறிவிட்டது. அதற்குப் பின் 1,000 மைல் தூரம் எதிரி துரத்தியடிக்கப்பட்டு விட்டான். எகிப்துக்குப் பயம் நீங்கினது. அதன்மேல் அட்லாண்டிக் மகா சமுத்திரத்தைக் கடந்துவந்த அமெரிக்கன் துருப்புகளும்—"கடலாதிக்கம் யாருடையது"? ஸ்வதந்திரமுள்ள பிரெஞ்சுக்காரர்களும், மற்றவர்களும் எதிரி முன்னிலையில் வித்தியாசத்தை மறந்து ஒன்றுபட்டவர்களாய் இந்தியர்கள் உள்பட பிரிடிஷ் படைகளும், ஜெர்மானியர்களை இருபக்கங்களிலிருந்தும் தாக்கினார்கள். டூனிஸியாவின் வடக்கே ஒரு சிறு பூபாகத்தில் சீஸாவில் கார்க்குப் போட்டு அடைத்த மாதிரியாக எதிரி அடைபட்டான். டூனிஸியாவிற்குத் தெற்கிலுள்ள மாரெத் அரண் பிளக்க முடியாதென்று ஜெர்மானியர்கள் நினைத்தார்கள். ஆனால் பிரிடிஷ், அமெரிக்க, பிரெஞ்சுப் படைகளின் சிலாக்கியமான ஒத்துழைப்பை எதிர்த்து நிற்கவல்லது எது? மாரெத் அரண் போன சுருக்கே தெரியவில்லை. வட டூனிஸியாவில் இயற்கையாக அமைந்த பாதுகாப்புகளுக்குப் பின்னால் எதிரி வந்து தங்கினான். இந்த இடங்களிலிருந்து எதிரியை வெளியேற்றுமுன் நாம் இழுத்துப் பறித்துக்கொண்டு நிற்கவேண்டியதுதான் என்று நினைத்தோம். ஆனால் அச்சு நாட்டுத் துருப்புகள் நாடகமேடையில் நடிப்பதையும்விட அதிசீக்கிரமாக ஒடுங்கிவிட்டன. பிஸெர்ட்டா, டூனிஸ், ஆகிய பெரும் கோட்டைகள் வீழ்ந்தன. கேப்பான் தீபகற்பத்திற்குள் வான் ஆர்ணிம் துரத்தியடிக்கப்பட்டான். அவனுடைய ஆட்கள் ஓய்ந்து போனார்கள். அவன் சாமான் ஸப்ளை மார்க்கங்களை நமது கடற்படைகளும், விமானப்படைகளும் அடிக்கடி துன்புறுத்தினார்கள். திடீரென்று மே மாதம் 13-ம் தேதி இந்தப் போர் முடிவடைந்தது. அச்சு நாட்டுக் கைதிகள் இரண்டு லக்ஷம் பேர்களையும், நல்ல ஸ்திதியில் இருந்த ஏராளமான யுத்த தளவாடங்களையும் கைப்பற்றினோம். பெயர்பெற்ற ஜெர்மன் தளபதி வான் ஆர்ணிம் யுத்தத்தில் கைதியாகப் பிடிக்கப்பட்டான். நான்காம் இந்தியப் பட்டாளம் பெருமையுடன் அவனைக் கைதியாக்கினது. இதாலிய தளபதி மெஸ்ஸியும் பிடிக்கப்பட்டான். பிரிடிஷ் ஆயுதபாணிகள் எக்காலத்திலும் அடைந்த வெற்றிகளெல்லாம் மகத்தானது என்று சொல்லிக் கொள்ளக்கூடியது இது ஒன்று. வட ஆபிரிக்கக் கடற்படை நம் வசமென்றால் ஐரோப்பா கண்டத்தைத் தாக்குவதற்கு நம் வசமான விமான தளங்கள் கிட்டிவிட்டது. மேலும் மத்தியதரைக் கடலில் எதிரியின் ஸப்மரீன்களின் ஆபத்து இன்னும் இருந்து வந்தாலும் முன்போல் இல்லாமல் வெகுவாய்க் குறைந்துவிடும்.

5. இந்தியாவிலிருந்து இங்கிலாந்துப் போக்குவரத்துக்குக் குறுக்குப்பாதை மத்தியதரைக் கடல் மார்க்கமானதாகையால் அது இப்போது நேசதேசங்களின் சஞ்சாரத்திற்கு மறுபடியும்

நம்வசம் வந்துவிட்டது. ஸிஸிலிக்கு அடுத்த குறுகிய கடல் சந்திப்புகள் இப்போது நேச தேச விமானப் படையெடுப்புக்கு இலக்காகிவிட்டன. மத்தியதரைக்கடலின் மேல்பாகத்தில் ஸிஸிலி, ஸார்டினியா, பான்டிலேரியா முதலியவற்றை பிரிடிஷ் விமானப்படைகள் இப்பொழுது மும்மரமாகத் தாக்கி வருகின்றன. ஜெர்மன் விமானப்படை இவற்றைக் காப்பாற்ற முடியவில்லை.. மால்டாவில் இப்போது எதிரி வெடிகுண்டு வீசுவதைக் காணோம். ஐரோப்பாவை ஹிட்லர் கையிலிருந்து பிடுங்குவதற்கு போர் புரிய தகுந்த சமயம் வாய்த்துவிட்டது. சீக்கிரத்தில் ஜப்பானையும் ஒரு கை பார்க்கலாம். தாத்காலிகமாக அதன் கைவசமாகியுள்ள ஏராளமான பூபாகங்கள் விடுவிக்கப்பட்டு துன்மார்க்கத்தில் சம்பாதித்த லாபத்தை ஜப்பான் கக்கும்படி பலவந்தப் படுத்தப்படும். நானும் ஒரு வல்லரசென்று ஜப்பான் தலைதூக்க முடியாத காலம் தூரத்தில் இல்லை. பஸிபிக் மாகா சமுத்திரம் ஜப்பானுக்குக் கொஞ்சம் ஆதரவாக இருக்கிறது. நமது கைவசம் இன்னும் அதிகமாகக் கப்பல்களைத் திரட்டி வைத்துக்கொண்டவுடன் நாம் நமது படைகளைத் திரட்டி ஜப்பானை மண்டையடியாய் அடிப்பதற்குத் தேவையான தளங்களைப்பற்றக்கூடிய சமயம் வாய்க்கும். வட ஆபிரிக்க யுத்தம் ஆரம்பித்து இப்போது மூன்று வருஷங்கள் ஆகின்றன. அந்தக் காலத்தில் நாம் வெற்றியும், தோல்வியும் பார்த்திருக்கிறோம். டுனிஸியாவில் நடந்த கடைசி யுத்தத்தில்தான் ஆபிரிக்காவில் அச்சு நாடுகளின் கதிக்கு ஒரு முடிவு ஏற்பட்டது. அதுவே நேசதேசப் பட்டாளங்களுக்கும் ஒரு மகத்தான வெற்றியாகும். முஸோலினியின் ஆபிரிக்க சாம்ராஜ்யம் அறவே ஒழிந்துவிட்டது. இன்று நாம் கொண்டாடும் தினத்தை "டுனிஸியா தினம்" என்று அழைப்பது மிகவும் பொருத்தமானது.

6. இன்றுபோல் நமக்கு என்றும் நல்ல காலம் தென்பட்டதில்லை. உலகில் பெரும் நிகழ்ச்சிகள் நடைபெறப்போகின்றன. இறுதியில் வெற்றி நேசதேசங்களுக்கே. அந்த வெற்றி மார்க்கத்தை நோக்கி இப்போது நாம் சென்றுகொண்டிருக்கிறோம். வட ஆபிரிக்கா ஒரு ஆரம்பம்தான். பெரிய வெற்றிகள் இனிமேல் தொடரும். ஆனால் யுத்தம் முடிந்துவிட்டது என்றாவது, அதைப்பற்றி அக்கரை எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை என்றாவது நினைக்காதீர்கள். யுத்தம் முடிந்த பிறகும் உலகம் அமைதிபெற வெகு நாட்கள் செல்லும். இடையில் நம்மால் இயன்ற அளவில் எவ்வளவு அற்பமாயினும், நாம் ஒவ்வொருவரும் நேசதேசங்களுக்கு வெற்றி சீக்கிரத்தில் கிடைக்கும் வழியைத்தேடவேண்டும். நம் ஒவ்வொருவருக்கும் யுத்தத்தால் ஏற்படும் அசௌகரியங்களையும், கஷ்டங்களையும், முணுமுணுக்காமல் சிரித்த முகத்துடன் பொறுத்துக்கொள்வது ஒரு வழி. அரசாங்கத்தாரை சங்கடத்தில் வைக்கக்கூடிய வதந்திகளை பரப்பாமலிருப்பது மற்றொன்று. இப்படிப்பட்ட வதந்திகளைப் பரப்பும் ஜனங்களை தேசிய யுத்த முன்னணி அங்கத்தினர்களிடமும், ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களிடமும் நீங்கள் தெரிவிக்கலாம். அதேபோல் அநியாய லாபம் சம்பாதிப்பவர்களையும், சரக்குகளைச் சேமித்து வைப்பவர்களையும் நீங்கள் காட்டிக்கொடுக்கலாம். இது விஷயத்தில் பொது ஜனங்களுடைய ஒத்தாசை எங்களுக்கு இன்றியமையாதது. கையளவு உத்தியோகஸ்தர்கள், பிறர் ஒத்தாசையில்லாமல் என்ன செய்யக்கூடும்? அதிக உணவுப்பொருள் விளைவிப்பதில் உங்களால் முடிந்ததை நீங்கள் செய்யலாம். சென்ற வருஷத்தைவிட இவ் வருஷம் 20,000 ஏகர் பூமியில் தவச தானியங்கள் உபரியாக நமது ஸமஸ்தானத்தில் விளைவிக்கப்பட்டிருக்கின்றன. ஸர்க்கார் சிப்பந்திகள் உங்களுக்குத் தங்களால் இயன்ற ஒத்தாசை புரிந்து வருகிறார்கள். சில்லரைச் சச்சரவுகளிலும், புகாராக்களிலும், அனாவசியமான மனுக்களிலும், வியவகாரங்களிலும் உங்களுடைய காலத்தைப் போக்காமல் நீங்கள் இருக்கவேண்டும். இந்த வழிகளிலும் மற்ற வழிகளிலும் ஏதாவது உதவி புரிந்து, நாம் எல்லோரும் விரும்பி பிரார்த்திக்கிறபடி சீக்கிரத்தில் வெற்றி வந்தெய்துமாறு செய்ய விரும்பாதவர்கள் உங்களில் ஒருவரும் இல்லை என்று நான் நிச்சயமாய்க்கூறுவேன்.

---

## வட ஆபிரிக்கா யுத்த முடிவு.

### மேன்மை தங்கிய வைஸிராயின் ஒலிபரப்புப் பிரசங்கம்—மே 14.

வட ஆபிரிக்காவில் சுமார் நான்கு வருஷ காலமாகச்செய்த தியாகமும் பட்ட கஷ்டமும் முடிவில் மகத்தான வெற்றியளித்தது. ஆபிரிக்கா கண்டம் சுத்தப்படுத்தப்பட்டு எதிரிகளின் பெரும் படைகள் பிடிபட்டோ முற்றிலும் சேதப்பட்டோ அழிந்தன. ராணுவ நடவடிக்கைக்குக் கேந்திரமான மத்தியதரைக்கடல் போக்குவரத்து திறக்கப்பட்டுவிட்டது. ஆபிரிக்கக் கடற்கரை நெடுக பிரெஞ்சு, அமெரிக்க, பிரிடிஷ், சாம்ராஜ்ய நாட்டு, இந்தியத் துருப்புகள்

அணியணியாக, வெற்றி கோஷத்துடனும், சகோதரபாவத்துடனும், யுத்த முனையில் பரஸ்பர நம்பிக்கை சோதிக்கப்படும், அடுத்துச்செய்யவேண்டியதை ஆவலுடன் எதிர் பார்த்துக்கொண்டும், ஐரோப்பா கண்டம் பூராவும் விருத்தியடைந்து பரவியிருக்கும் ஆபாச மான நாஸிக் கிளர்ச்சியை வேரடியோடு கிளைந்து விடுவதற்கு ஊக்கத்துடனும் நிற்கின்றன. ஆபிரிக்காவில் நமது விமானப்படை செய்திருக்கும் அரிய வேலைகளையும், நமது துருப்புகள் கண்ணுற்றிருக்கின்றன. வரப்போகும் போர்களில் எதிரிகளுக்குச் சாத்தியமில்லாத வகையில வலிமையும் உயர்வும் பொருந்திய விமானப்படையின் சகாயம் அவர்களுக்குக் கிடைக்குமென் றும் அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். மத்தியதரைக்கடலில் நமது கடற்படையுடையவும் மாலுமி களுடையவும் உயர்வான சாதுர்யத்தையும், தீரத்தையும் அவர்கள் கண்ணுற்றார்கள். உலகத் தில் பலவேறு பாகங்களிலுள்ள தாய்நாட்டு மக்கள் அவர்களுடைய வெற்றிக்கும் க்ஷேமத் திற்கும், இந்த உலக யுத்தம் முடிவடைவதற்கும் பிரார்த்தனை செய்துவருகிறார்களென்றும் நமக்கு வெற்றி கிடைக்கும் வரையிலும் நமது துருப்புகள் பெர்லின் நகரத்துக்குள் நுழைந்து விடும் வரையிலும் மாதக்கணக்கிலோ வருஷங்கள் கணக்கிலோ, கஷ்ட நிஷ்டூரங்களை அனுபவிப்பதற்கும் தயாராகயிருக்கிறார்களென்றும் அவர்கள் அறிவார்கள்.

வட ஆபிரிக்காவில் நமது படைகளுக்குக் கிடைத்த இப்பெரும் வெற்றி யுத்தப்போக்கில் ஒரு கட்டத்தின் முடிவாகும்.

டூனிஸியப் போராட்டத்தில் கலந்துகொண்ட பிரிடிஷ், இந்தியத் துருப்புகளுக்கும், அமெரிக்கப் படைகளுக்கும், புத்துயிர் பெற்றுவரும் பிரெஞ்சுத் துருப்புகளுக்கும், சாம்ராஜ்யத் துருப்புகளுக்கும் நமது பாராட்டைத் தெரிவிக்கவேண்டும். வெற்றியில் நமது 4-வது இந்தியப் படை விசேஷ கியாதி பெற்றதென்றும் நாம் சந்தோஷப்படுகிறோம். டூனிஸியா விலில்லாத அநேக துருப்புகள் ஆபிரிக்காவில் 1940, 1941, 1942-ம் வருஷங்களில் புகழ் பெற்றதென்பதை நாம் மறந்துவிடக்கூடாது. தளபதி வேவல் நடத்திய யுத்த நடவடிக்கை களிலும் எகிப்தைக் காப்பாற்றுவதற்காக ஜெனரல் ஆசின்லெக் செய்த தீரமான போரிலும் இந்தியத் துருப்புகள் எடுத்துக்கொண்ட பெரும் பங்கைப்பற்றிப் புகழுரை சொல்லவேண் டியதும் நன்றியறிவிப்பதாகும். ஆபிரிக்கா யுத்த ஆரம்பத்திலிருந்து யுத்தத்தில் ஈடுபட்ட எல்லாத் துருப்புகளின் ஒத்துழைப்பினால்தான் நமக்கு வெற்றி கிடைத்தது. அதைத்தான் நாம் இப்பொழுது கொண்டாடுகிறோம். வெற்றிக்குக் காரணம் சண்டை போட்டவர்கள் தானென்று துருப்புகள் பாத்தியம் கொண்டாடமாட்டார்களென்பது நிச்சயம்.

இந்தியாவில் நெருக்கடியான நிலைமை ஏற்பட்டிருந்தது. உள்நாட்டுக் கலகத்தை நாம் அடக்கவேண்டியிருந்தது. ஒரு வருஷத்திற்கு முன்பு கிழக்கேயிருந்தும், மேற்கேயிருந்தும் இந்தியா படையெடுப்புக்குள்ளாகுமென்ற நெருக்கடியிருந்தது. ஆபிரிக்கா வெற்றியிலிருந்து மேற்கெல்லைக்கேற்பட்டிருந்த பயம் நீங்கிவிட்டது.

## யுத்த முயற்சிகள்.

உணவுப் பொருள்கள் சம்பந்தமாக நமக்கு மகத்தான கவலை ஏற்பட்டிருந்தது. எவ்வளவு கஷ்டங்களிருப்பினும் நம்முடைய யுத்த முயற்சிகள் அதிகரிக்கவேண்டுமென்று நான் நினைக்கிறேன். நமக்குக் கிடைக்கும் ஒவ்வொரு வெற்றியிலும் ஆயிரக்கணக்கான மனிதர்களுக்கும், ஸ்திரீகளுக்கும், போலிஸ், ரயில்வே உத்தியோகஸ்தர்களுக்கும், பொதுஜன பாதுகாப்புப் படைகளுக்கும், தொழிலாளர்களுக்கும், டாக்டர்களுக்கும், தாதிகளுக்கும், இஞ்ஜினியர்களுக்கும் இன்னும் அநேகருக்கும் பங்கு உண்டு. இந்தியாவானது ஆபிரிக்க நிகழ்ச்சிகளுக்கு ஒரு பெரிய தளமாகயிருந்தது. இங்கிருந்து முதலில் நம்முடைய தற்காப்பு களைப் பலப்படுத்துவதற்கும், பிறகு எதிரியை நசுக்கி முறியடிப்பதற்கும் தேவையான முக்கிய மான ஸப்ளைகள் அனுப்பப்பட்டன. யுத்தத்தில் வெற்றி பெறவேண்டுமென்று அபிப்பிராயப் படும் பொதுமக்களின் பிரதிநிதியான தேசிய யுத்த முன்னணியானது, ஆபிரிக்கா வெற்றி களைக் கொண்டாடும் பொழுது, வெற்றியில் பொதுமக்களின் பாகத்தைப்பற்றிச் சொல்லு வதுடன், தற்பொழுது அபலாபமடையவேண்டுமென்று நினைத்துத் தன்னந்தனியே இருந்து வரும் ஜனங்களையும் நிந்திக்கவேண்டும்.

## ஜெர்மனி இன்னும் வலுவுள்ளது.

யுத்தத்தின் மத்தியில் நம்மை நாமே பாராட்டிக்கொள்ளுவது ஆபத்தான செய்கை யாகும். இதனால் யுத்த முடிவு கிட்டிவிட்டதென நினைக்கக்கூடிய மனப்பான்மை சிறிதும் ஏற்படக்கூடாதென இப்பொழுது நான் எச்சரிக்க விரும்புகிறேன். ஜெர்மனி இன்னும்

மகத்தான சக்திவாய்ந்த தேசமாகயிருந்துவருகிறது. விசேஷ தீரத்துடன் போராடும் நமது நேசதேசமான ருஷ்யாவை அது இன்னும் கடுமையாகத் தாக்கி சேதம் விளைவிப்பதோடு மேற்கே படையெடுக்கக்கூடிய நமது துருப்புகளையும் அது பலமாக எதிர்க்கவும் கூடும். ஜெர்மனியைப் பலமாக நசுக்கி அதன் திமிரை மண்ணோடு மண்ணாக்கியதும் ஜப்பானிய அபாயத்தை நாம் தவிர்க்கவேண்டும். ஜப்பானியர் நாகரீகமற்ற பிராசீன ஜாதியர்கள். உண்மை கலை ஞான மற்றவர்கள். தயை என்ற குணமேயில்லாதவர்கள். ஆனால் தேசத்திற்காக யாவையும் தியாகம் செய்யக்கூடிய வெறிபிடித்த ஜாதியாராவார். அவர்கள் சிலாக்கியமான சில தேசங்களையும், தளங்களையும் பிடித்திருக்கிறார்கள். அவைகளைப் பலப்படுத்துவதற்கும் அவர்களுக்கு அவகாசம் ஏற்பட்டுவிட்டது. காலப்போக்கில் நாம் அவர்களைத் தாக்கி எதிர்ப்பதற்காகச் சேகரிக்கும் படைகள் அவர்களை நசுக்கிவிடக்கூடும். ஆகிலும் பலன் சீக்கிரம் கிட்டிவிடாதென்று நினைக்கிறேன்.

### ஜப்பானியரிடமிருந்து பயம்.

கிழக்கெல்லையிலுள்ள நமது படைகளைப் பார்வையிட்டுவிட்டு நான் இப்பொழுது திரும்பி வந்திருக்கிறேன். இந்தியாவைப் படையெடுப்பிலிருந்து காப்பதற்காக அவர்கள் பெரும் கஷ்டங்களுக்குள்ளாகவேண்டியிருந்தது. அவர்கள் மிகவும் உற்சாகத்துடனிருக்கிறார்கள். இந்தப் பிராந்தியத்தில் அவர்கள் அநேகம் செய்திருக்கிறார்கள். ஆகிலும் ஜப்பானிய எதிரியின் சக்தியை ஒருவரும் குறைத்து மதிக்கவில்லை. அவனைப் பூராவாகவும் நாம் நசுக்கி விடுவோமென்பதில் சந்தேகமில்லை. அமெரிக்கர்களும், சீனர்களும், நாமும் இது விஷயத்தில் முடிவு செய்து விட்டோம். தன்னுயிரைக் காப்பாற்றிக்கொள்ளவேண்டிய முறையில் ஜப்பானை நசுக்குவது அவசியமாகும். உன்னுடைய அறையில் இரண்டு விஷப் பாம்புகளிருந்தது. ஒன்றைக் கொல்லுவதற்கு நீ விசேஷ பிரயாசை எடுத்துக்கொண்டால் மற்றொரு சர்ப்பமும் நாசமடையும் வரையில் உன்னுடைய முயற்சிகளை நீடித்துச் செய்வதும்தான் முறையாகும். ஜப்பானியர்களும், ஜெர்மானியர்களும் ஒரேவிதமான கொள்கைகளுடையவர்கள் தான்.

ஜெர்மானியர்களை மண்ணோடு மண்ணாகச்செய்துவிட்டாலும் ஜப்பானுக்குத் தகுந்த சிக்ஷை விதிக்காதபோனால் அந்த யுத்தம் பிரயோஜனமற்றது. சமாதானம் ஏற்பட்டு அதன் மூலம் ஜப்பான் ஆக்கிரமித்த நாடுகளில் ஒரு சதுர மைல் கூட ஜப்பானியர் வசம் விட்டு விடுவோமாகில் கிழக்குப் பிராந்தியங்களில் மட்டுமில்லாமல், உலகம் பூராவிலுமே வருங்காலத்திய மனித வாழ்க்கைக்கும், மனித ஸ்வதந்திரத்துக்கும் கெடுதல் விளைவிப்பதாகும்.

வெற்றியடைந்த இத்தருணத்தை, நாம் கொண்டாடும் சமயத்தில், நமக்கு முடிவான வெற்றி இன்னும் கிட்டிவிடவில்லையென்று உங்களுக்கு ஞாபகம் மூட்டுகிறேன். நமது கொண்டாட்டங்களிலிருந்து பயனற்ற நம்பிக்கை ஏற்படாமல் மேலும் வெற்றிபெற புது பலம் பெறவேண்டுமென்று நான் குறிப்பிடுகிறேன்.

"உங்களுக்கு வந்தனம். தரையிலும், கடலிலும், ஆகாயத்திலுமுள்ள நேசதேசப் படைகளுக்கும் ஆசி கூறுகிறேன்."

---

## வார யுத்தச் செய்திகள்.

### 15—5—43-லிருந்து 21—5—43-வரை.

**டூனிஸியா.**—மேமீ 11-ம் தேதியன்று பிரிடிஷ் 1-ம் சேனை ஹம்மாம்லிப் பிராந்தியத்தைப் பிளந்துகொண்டு ஹம்மாமத், ஸாலிமான், மெட்ஸல், பான் ஸெல்பாவைப் பிடித்துக்கொண்டு, அச்சுப் படைகளை கேப்பான் தீபகற்பத்தில் வளைத்துக்கொண்டார்கள். தெற்குப் பக்கத்தில் பிரிடிஷ் எட்டாம்படை என்பிடாவில்லிக்குச் சமீபத்திலுள்ள பான் பிச்சாவில் எதிரியை வளைத்துக் கொண்டது. பிரெஞ்சுக்காரர்களும் ஸாகூவான் என்னுமிடத்தில் தாக்கினார்கள். தப்பி ஓட வழியில்லாமலும், ஸப்ளைகளும் உதவிகளும் வர வசதியில்லாமலும் அச்சுப்படைகள் சரண்புகுந்தன. வட ஆபிரிக்காவில் அச்சுப்படைகளுக்கு தளகர்த்தராகயிருந்த ஜெனரல் வான் ஆர்னிம் பிரபுவை நாலாவது இந்தியப்படை கைதி செய்தது. உத்தியோக முறையில் வெளியிட்ட படி மேமீ 12-ம் தேதி புதன்கிழமை இரவு 8–15 மணிக்கு அச்சுப்படைகளின் எதிர்ப்பு ஓய்வுற்றது. ஆபிரிக்கா யுத்தம் ஆரம்பமாகி 2 வருஷங்கள்

11 மாதங்கள் 2 நாட்களுக்குப் பிறகு இது நேரிட்டது. மேமீ 5-ம் தேதிக்குப் பின் 1,50,000 துருப்புகள் கைதி செய்யப்பட்டுவிட்டன.

மத்தியதரைக்கடலில் யுத்தம் நடைபெறுகிறது. நேபிள்ஸ், காக்ளியாரி, கலாட்ரியா, மெஸ்ஸினு, ஸிவிடா, வெக்ஸியா, ஒப்பிடா முதலிய இடங்கள் வெடிகுண்டுகளால் தாக்கப் பட்டன. மூன்று நாட்களாக நொருக்கிய பிறகு பாண்டலேரியாவிலுள்ள அச்சு விமான தளம் உபயோகமில்லாமல் போய்விட்டது.

**ருஷ்யா**—மேமீ 12-ம் தேதியன்று வார்ஸாவை ருஷ்ய வெடி விமானங்கள் தாக்கின. நோவாராஸிஸ்க்குக்கு யுத்தம் நடைபெறுகிறது. யூக்ரேனிலும் ஓரெல் பகுதியிலும் ருஷ்ய விமான நடவடிக்கை அதிகரித்திருக்கிறது. லெனின்கிராட், பிரியான்ஸ்க் பகுதிகளில் ருஷ்யர் கள் தாக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

**பஸிபிக் யுத்தம்**—அமெரிக்கப் படைகள் மேமீ 11-ம் தேதியன்று அட்டு தீவில் இறங்கின. இந்தத் தீவை எதிரியிடமிருந்து பிடுங்கிக்கொள்ள சண்டை நடைபெறுகிறது. அட்டு தீவு, அலூஷியன் தீவுகளில் ஒன்று. சென்ற ஜூன் மாதத்தில் இதை ஜப்பானியர் பிடித்துக்கொண்டார்கள்.

**சைனு**—ஹூனுன் மாகாணத்தில் டங்டிங் ஏரியின் மேற்குக் கரையோரமாக பலமான சண்டை நடைபெறுகிறது. ஜப்பானியர்கள் செங்டேயை நோக்கி முன்னேறுகிருர்கள். யாங்ட்ஸீ நதிக்கரையில் இச்சாங்க்குக்கு சமீபத்தில் சீனர்கள் தாக்க ஆரம்பித்தார்கள்.

**பர்மா**—எதிரிகள் தொங்தரவன்னியில் மேமீ 11-ம் தேதியன்று மாங்டாவை நமது துருப்புகள் காலிசெய்தன. ஐரோப்பாவிலும், பர்மாவிலும், பஸிபிக்கிலும் நடைபெற்ற நேசதேச விமானத்தாக்குதல்களின் விவரங்கள் அடுத்த பகுதியில் வெளியிடப்பட்டிருக் கின்றன.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**9—5—43.** (ஞாயிற்றுக்கிழமை).

**ஜெர்மன் ஆக்கிரமித்த ஐரோப்பா** (Europe).

இரவு—சுரங்கவெடி பாவுதல்—எதிரி ஜலப் பிராந்தியங்களில்.

**கேப் பான்** (Cape Bon), **இதாலி** (Italy), **மத்தியதரைக்கடல்** (Mediterranean).

சைனியங்களும், போக்குவரத்துகளும்.—கேப்பான் (Cape Bon) தீபகற்பம்.

**எதிரி கப்பல்கள்.**—தீபகற்பத்தின் கடற் கரைகளைச் சுற்றிலும் பிஸெர்ட்டா (Bizerta) கரை.

**விமான நிலயம்.**—பான்டெல்லேரியா (Pantellaria).

**கப்பற்கட்டும் துறைகள், தொழிற்சாலைப் பிரதேசங்கள்.**—ஸிஸிலியிலுள்ள பாலெர் மோ (Palermo).

**ரயில்வே பாலம்.**—ஸிஸிலியிலுள்ள லிகாடா (Licata).

**ரயில்வே ஸ்டேஷன்.**—ஸிஸிலியிலுள்ள மார்ஸாலா (Marsala).

**விமான நிலயம்.**—ஸிஸிலியிலுள்ள கெலா (Gela).

**துறைமுகம்.**—மெஸ்ஸினு (Messina).

**எதிரிக் கப்பல்.**—ஏஜியன் (Agean Sea) கடல்.

**ருஷ்யா** (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமா னங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழு வதும்.

**தூரக்கிழக்கு** (Far East).

டச்சு நியூ கினியாவிலுள்ள கேரம் (Ceram), கெய்மான (Kaimana).

**ஜப்பானிய தளம்**—மானேக்வாரி (Manok-wari).

**ஜப்பானிய வியாபாரக் கப்பல்.**—டச்சு நியூ கினியாவிலுள்ள சுராங் (Surong).

**துறைமுகம்.**—நியூ பிரிடனிலுள்ள உபிலி (Ubili).

டாலா கடல் (Tala Sea).

**விமான நிலயம்.**—நியூ பிரிடனிலுள்ள காஸ் மாடா (Gasmata), கிளஸ்டர் முனை (Cape Gloucester), விட்டியா ஜலசந்தியி லுள்ள புரூக் தீவு (Brooke Islands).

**விமான நிலயங்கள்.**—நியூ கினியாவிலுள்ள வீவாக் (Wewak), மாடாங், ஸெய்டார் (Saidor).

**ஜப்பானியப் போக்குவரத்துகள்.**—மாயுநதி யோரங்களில்.

எண்ணெய் ஸ்தாபனங்கள்.—பர்மாவிலுள்ள மாக்வீக்கு தெற்கே.

எண்ணெய்ப் படகு.—புரோம் (Prome).

பாங்கியேக் பாலம் (Hpaungiek bridge).

பர்மாவிற்கருகிலுள்ள கேலெம்யோ (Kalemyo), அக்யாப் (Akyab).

**10—5—43.** (திங்கட்கிழமை).

ஜெர்மன் ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

இரவு.—இருப்புப் பாதைகள்—டூலா (Tula), குர்ஸ்க் (Kursk).

ருஷ்யாவிலுள்ள பிரியான்ஸ்க் ஒரெல் (Bryansk-Orel) பிரதேசம்.

கேப்பான் (Cape Bon), மத்தியதரைக் கடல் (Mediterranean) இதாலி (Italy).

எதிரித் துருப்புகள், மோட்டார் போக்குவரத்துகள்.—கேப்பான் தீபகற்பம் (Cape Bon Peninsula).

விமான நிலயம், கப்பல் கட்டும் துறைகள், கப்பல்கள்.—பான்டெல்லேரியா (Pantellaria).

விமான நிலயங்கள்.—ஸிஸிலியிலுள்ள மிலோ (Milo) போரிஸ்ஸோ (Borizzo).

கப்பற் கட்டும் துறைகள், இதர லக்ஷியங்கள்.—ஸிஸிலியிலுள்ள பாலர்மோ (Palermo).

துறைமுகம்.—ஸிஸிலியிலுள்ள மார்ஸாலா (Marsala).

எதிரிக் கப்பல்கள்.—ஸிஸிலிக்கு அருகில்.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயம்.—டச்சு நியூகினியாவிலுள்ள பாபோ (Babo).

டோபோ (Dobo).

டாணிம்பாரி தீவிலுள்ள ஸாம்லகி (Saumlaki).

ஆரோ தீவிலுள்ள டிராங்கோன் தீவு (Trangon Island).

ஜப்பானியக் கப்பல்—டாலா கடல் (Tala Sea)

விமான நிலயம்.—நியூ பிரிடனிலுள்ள கிளஸ்டர் முனை (Cape Gloucester).

விமான நிலயங்கள்.—நியூ கினியாவிலுள்ள ஸாலமூவா (Salamaua) பின்ஸ்சாபென் (Finschhafen).

ஜப்பானிய ஸ்தாபனங்கள்.—லே (Lae).

ரயில்வே ஸ்டேஷன்.—பர்மாவிலுள்ள வுந்தோ (Wuntho).

எதிரி லக்ஷியங்கள்.—பர்மாவிலுள்ள அல்லான்யோ (Allannyo), புரோம், (Prome) மிண்டயா (Mindya).

**11—5—43.** (செவ்வாய்க்கிழமை).

ஜெர்மன் ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

இரவு.—ஜெர்மன் ஆக்கிரமித்த ருஷ்யாவிலுள்ள நீப்ரோபெட்ராவஸ்க் (Dnepropetrovsk), போல்டாவா, (Poltava), பிரயான்ஸ்க் (Bryansk), கிரேஸ்நோகிராட் (Krasnograd), லோஸோஉயா (Lozovaya); கோராக்கா (Korocha); இன்னும் பல இடங்கள்.

கேப்பான் (Cape Bon), மத்தியதரைக்கடல் (Mediterranean), இதாலி (Italy).

எதிரித் துருப்புகள், வண்டிகள்.—கேப்பான் தீபகற்பம் (Cape Bon Peninsula).

துறைமுகம்.—கடேனியா (Catania).

கப்பற்கட்டும் துறைகள் ரயில் ரோட் ஸ்டேஷன்கள்.—ஸிஸிலியிலுள்ள மார்ஸாலா (Marsala)

கப்பல்கள்.—கிரீஸ் (Greece).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுமையும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானியச் சைனியங்கள்.—நியூ ஜார்ஜியாவில் உள்ள முண்டா (Munda), அலூஷியனிலுள்ள கிஸ்கா (Kiska), வங்காதீவிலுள்ள வங்கா (Vanga).

விமான நிலயம்.—கிளஸ்டர் முனை (Cape Gloucester).

ஜப்பானிய ஸ்தாபனங்கள்.—நியூ கினியாவிலுள்ள வீவாக் (Wewak).

எதிரி தண்ணீர் போக்குவரத்துகள்.—மாயூ நதி (Mayu River).

ஸப்ளைப் படகுகள்.—ஐராவதி நதியில் சாக்கிற்கும் (Chauk) ஏனங்யாங்கிற்கும் (Yenangyaung) இடையில்.

விமான நிலயம்.—கங்காங் (Kangaung) பர்மாவிலுள்ள மெய்க்டிலா (Meiktila), அக்யாப் தீவிலுள்ள யெக்யான்பின் (Yegyanbin).

எண்ணெய் சுத்தம் செய்யுமிடங்கள்.—பர்மாவிலுள்ள ஸிரியாம் (Syriam).

ரயில் ரோட் ஸ்தாபனங்கள்.—பர்மாவிலுள்ள (Mandalay), நியாஙபின்வன் (Nyaungbinwun), லெகி (Legyi), முனிவா (Monywa), ஷீவிபோ (Shwebo).

கிராமங்கள்.—மித்கிளக்கருகிலுள்ள டியான்ஷூப் (Tianzup).

**12—5—43.** (புதன்கிழமை).

ஜெர்மன் ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

மாலை.— எதிரி ஸப்ளைக் கப்பல்கள்—நார்வே (Norway) மூழ்கடிக்கப்பட்டது.

இரவு.—தொழிற்சாலைகள்—ஜெர்மானியரால் ஆக்கிரமிக்கப்பட்ட டேயிஸ்பர்க், போலந்தின் தலைநகரான வார்ஸா (Warsaw) ஆக்கிரமித்த ருஷ்யாவிலுள்ள பிரெயான்ஸ்க் (Bryansk), ஓரெல் (Orel), இதர தளங்கள்.

**கேப் பான் (Cape Bon), மத்தியதரைக்கடல் (Mediterranean), இதாலி (Italy).**

எதிரித் துருப்புகள், வண்டிகள்.—கேப்பான் தீபகற்பம் (Cape Bon Peninsula).

கப்பற்கட்டும் துறைகள், கப்பல் தளங்கள்.—இதாலியிலுள்ள நேபிள்ஸ் (Naples).

ரயில்வே ஸ்டேஷன்கள்.—தெற்கு இதாலி, ஸிஸிலியிலுள்ள போர்ட்டோ (Porto), எம்பெடோஸில் (Empedocle).

துறைமுகம்.—ஸிஸிலியிலுள்ள கடானியா (Catania).

கப்பற்கட்டும் துறைகள்.—பாண்டெல் லேரியா (Pantelleria), மார்ஸாலா (Marsala).

கட்டடங்கள்.—சைராஸ் (Syros) தீவிலுள்ள துறைமுகங்கள்.

எதிரிக் கப்பல்கள்.—ஏஜியான் கடல், கிரீஸ் கடற்கரை.

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானியச் சைனியங்கள்.—ஷார்ட்லண்ட்ஸ் தீவிலுள்ள பல்லாலி (Ballale).

காஹிலி (Kahili), நியூ ஜார்ஜியாவிலுள்ள முண்டா (Munda), கொலம்பங்காரத் தீவிலுள்ள விலா (Vila).

விமான நிலயம்.—நியூ பிரிடனிலுள்ள காஸ்மாடா (Gasmata), ராதிடாங் (Rathedaung), யெக்யான்பின் (Yegyanbin), இதர இரண்டு எதிரி ஆக்கிரமித்த கிராமங்கள் பர்மாவிலுள்ள அக்யாப் தீவு (Akyab).

ஜப்பானியப் போக்குவரத்துக்கள்.—பர்மாவிலுள்ள புரோமிற்கும், மாக்விற்கும் இடையில்.

ஸப்ளைப் படகுகள்.—மாக்வி (Magwe)க்கிற்கும் மிங்யானிற்கும் இடையில்.

படகுகள்.—பர்மாவிலுள்ள பாங்டின் (Paungtyin).

ரயில் ரோட் பாலம்.— பர்மாவிலுள்ள பின்மானா (Pyinmana)விற்கு 28 மைல்கள் வடக்கிலே.

சாமான் இறக்குமிடங்கள்.—பெஸ்ஸின் (Bassein).

சாமான் குவியல்கள், ராணுவ ஸ்தலங்கள்.—கெமெய்ங் (Kamaing).

**13—5—43.** (வியாழக்கிழமை).

**ஜெர்மன் ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்—விமானத் தொழிற்சாலை—பிரான்ஸிலுள்ள நியாட்ட (Neaulte).

விமான நிலயங்கள்.—ஸெயின்ட் ஓமெர் (St. Omer).

ரயில்வே ஸ்தலங்கள்.—போலோன் (Boulogne). (6 அச்சு விமானங்களும், 3 நேச தேச விமானங்களும் நாசமாக்கப்பட்டன).

விமான நிலயம்.—அப்பிவில்லி (Abbeville).

துறைமுகம்.—பிரான்ஸிலுள்ள செர்பர்க் (Cherbourg).

இரவு.—ஜெர்மானியர் தலைநகரான பெர்லின் (Berlin).

லக்ஷியங்கள்.—மத்திய ரூர் (Ruhr), ஸெக்கோஸ்லோவாக்கியா (Czechoslovakia).

**மத்தியதரைக்கடல் (Mediterranean), இதாலி (Italy).**

துறைமுகம் தொழிற்சாலைகள்.—ஸார்டினியாவிலுள்ள காகிலியாரி (Cagliari).

எதிரிக் கப்பல்கள்—அகஸ்டா துறைமுகம், ஏஜியான் (Aegean) கடல்.

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானிய ஸ்தாபனங்கள்.-ஷார்ட்லெண்ட்ஸ் தீவிலுள்ள காஹிலி (Kahili), அலூஷியனிலுள்ள கிஸ்கா (Kiska).

அட்மிராலிட்டி தீவிலுள்ள லோராங்கா பிரதேசம் (Loranga).

விமான நிலயங்கள்.—நியூ பிரிடனிலுள்ள ரபால் (Rabaul).

ஜப்பானியப் படகுகள்.—டாம்பியர்முனை (Cape Dampier), ருடிகர் முனை (Rudiger-point).

விமான நிலயம்.—க்ளஸ்டர்முனை (Cape-Gloucester), காஸ்மாடா (Gasmata).

நியூ கினியாவிலுள்ள மூபோ (Mubo), பின்ஸ்சாபேன் (Finschhafen).

ரயில்வே தளங்கள்.-மாண்டலே (Mandalay).

ரயில்வே பாலம்.—பர்மாவிலுள்ள மிதிக்கனி.

ஜப்பானியக் கப்பல்கள்.—பார்மாவிலுள்ள அக்யாபி (Akyab)ற்கும், ராம்ரி தீவிற்கும் மத்தியில். மாயு நதி (Mayu).

விமான நிலயம்.—ஹெஹோ (Heho).

**14—5—43** (வெள்ளிக்கிழமை).

**ஜெர்மன் ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

விமான நிலயம்.—டிரிக்வில்லி, கப்பல்கள்—கர்ணிக்கு அருகில்.

இரவு.—துறைமுக ஸ்தாபனங்கள்—ஜெர்மனியிலுள்ள எம்டன் (Emden).

கப்பல் கட்டும் தளங்கள்.—ஜெர்மனியிலுள்ள கீல் (Kiel).

**இதாலி (Italy),**

**மத்தியதரைக்கடல் (Mediterranean).**

இதாலிய துறைமுகம்.—கேவிடாச்சியா (Cavita Vecchia).

துறைமுகம்.—ஸார்டினியாவிலுள்ள ஒப்யா (Oblia) துறைமுகம், அல்கெரோ, ஸார்டினியாவிலுள்ள போர்ட்டோ டெர்ரிஸ் (Porto Terres.)

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

ரயில்வே ஸ்டேஷன்—பிரையான்ஸ்க் (Bryansk).

விமான நிலயம்—ஆக்கிரமிக்கப்பட்ட ருஷ்யா (Russia).

**தூரக்கிழக்கு (Far East).**

விமான நிலயம்—நியூ பிரிடனிலுள்ள ரபால் (Rabaul).

டச்சு நியூகினியாவிலுள்ள நேபயர் (Nabire).

ஜப்பானியத் துருப்புகள், போக்குவரத்துக்கள் பூதிடாங் (Buthidaung) பிரதேசம்.

கப்பல்கள்—ராம்ரிதீவு (Ramree).

ஸப்ளைப் படகுகள்—கலடான் (Kaladan) நதி.

விமான நிலயங்கள்—பர்மாவிலுள்ள காங்காங் (Kangaung) யெக்யான்பின் (Yegyanbyin) ராதிடாங் (Rathedaung) பர்மாவிலுள்ள புரோம் (Prome).

ரயில் ரோட் ஜங்ஷன்—தாஷி, ஷீவிபோ (Shwebo).

ரயில்வே ஸ்தாபனங்கள்—மிங்யான் (Myingyan), நியாங்பின்பன் (Nyaungbinwun).

**15—5—43.** (சனிக்கிழமை).

**ஜெர்மன் ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்.—விமான நிலயம்—பிரான்ஸிலுள்ள கேயன் (Caen), பாய் (Poix). (6 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை; 7 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

## அச்சு நாடுகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

**9—5—43.** (ஞாயிற்றுக்கிழமை).

**பிரிடன் (Britain).**

பிரிடனில் விமான நடவடிக்கை இல்லை.

**டூனிஸியா (Tunisia),**

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**ருஷ்யா (Russia).**

குபானில் (Kuban) உள்ள ருஷ்யச் சைனியங்கள்.

**10—5—43.** (திங்கட்கிழமை).

**பிரிடன் (Britain).**

லண்டன் பிரதேசத்தில் விமான எச்சரிக்கை மட்டும் (குண்டுகள் விழவில்லை).

**ருஷ்யா (Russia).**

மேல் டோனெட்ஸ் (Donetz) பிரதேசம்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஆஸ்திரேலியாவிலுள்ள மில்லங்கிம்பி (Millingimbi). (ஒரு ஜப்பானிய விமானம் சுட்டுத் தள்ளப்பட்டது).

**11—5—43.** (செவ்வாய்க்கிழமை).

**பிரிடன் (Britain).**

கிழக்கு ஆங்கிலியாவில் 2 இடங்கள் (2 அச்சு விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

**ருஷ்யா (Russia).**

ருஷ்ய அரணுக்குப் பின்னுள்ள ருஷ்யப் போக்குவரத்துகள்.

**தூரக்கிழக்கு (Far East).**

மில்லிங்கிம்பி (Millingimbi). (3 ஜப்பானிய விமானங்கள் உபயோகத்திற்கு லாயக்கில்லாமல் செய்யப்பட்டன). நியூகினியாவிலுள்ள மிலினி தடல் (Milne Bay).

**12—5—43.** (புதன்கிழமை).

**பிரிடன் (Britain).**

பிரிடனில் எதிரி விமான நடவடிக்கை ஏதும் இல்லை.

**ருஷ்யா (Russia).**

ருஷ்ய விமான நிலயங்கள்—ருஷ்ய அரணுக்குப் பின்னால் ருஷ்ய யுத்த அரங்களில் எல்லாம்.

**தூரக்கிழக்கு (Far East).**

நேசதேசக் கப்பல்கள்.—கூடல்கனர் (Guadalcanar).

**13—5—43.** (வியாழக்கிழமை).

**பிரிடன் (Britain).**

ஒரு தகவலும் இல்லை.

**ருஷ்யா (Russia).**

லிஸ்சியான்ஸ்க் பிரதேசம் (Lischiansk).

**தூரக்கிழக்கு (Far East).**

நியூ கினியாவிலுள்ள போர்ட் மோர்ஸ்பி (Port Moresby).

**14—5—43.** (வெள்ளிக்கிழமை).

**பிரிடன் (Britain).**

நகரம்.—கிழக்கு ஆங்கிலியா.

அல்ஜீரியா (Algeria), அல்ஜியர்ஸ் (Algiers) பிரதேசம் (5 அச்சு விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

**தூரக்கிழக்கு (Far East).**

விமானச் சண்டைகள்.—ரஸ்ஸல் தீவு (16 ஜப்பானிய விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன. 5 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

**15—5—43** (சனிக்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia).

பலவிதப்பட்ட யுத்த அரண்களிற்கு பின்னுள்ள ருஷ்யப் போக்குவரத்துக்கள்.

தூரக்கிழக்கு (Far East).

நியூ கினியாவிலுள்ள போர்ட் மோர்ஸ்பி (Fort Moresby). (2 ஜப்பானிய விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

நியூ கினியாவிலுள்ள பாப்டுபி (Bobdubi) கிராமம், வாவ் (Wau).

---

# யுத்தக் குறிப்புகள்.

---

**டூனிஸியா யுத்த முடிவு.** வட ஆபிரிக்க யுத்தம் முடிவுற்றது. அதிகார வர்க்கத்தார் சொல்லுகிறபடி மேமீ 12-ம் தேதி புதன்கிழமை இரவு டூனிஸியா யுத்தம் முடிவடைந்தது. மூன்று வருஷ பிரயாசையும், கஷ்டமும், நமக்கு வெற்றியளித்தது. 1,700 மைல்கள் மலைகளிலும், பாலைவனங்களிலும் துரத்தியடிக்கப்பட்டு, நன்றாய் முறியடிக்கப்பட்டு ஏராளமான அச்சுப்படைகள் சரணடைந்தன. வெற்றி குதூஹலத்துடன் புதிய தாக்குதல்கள் செய்வதற்கும் புதிய வெற்றிகள் பெறுவதற்கும் நேச தேசப்படைகள் காத்துக்கொண்டிருக்கின்றன.

வி வி வி வி வி

**குதூஹலம்.** நாம் குதூஹலமடைந்து கடவுளுக்குப் பிரார்த்தனை செய்வோம். இந்த சந்தோஷ சமயத்தில் 1940-ம் வருஷமிருந்த பயங்கரமான நிலைமையும், அப்பொழுது பிரான்ஸ் விழுந்ததையும், பிரிடன் எதிரி விமானங்களால் தாக்குண்டதையும், ஆபிரிக்காவை எதிரிகள் படையெடுத்ததையும் ஞாபகப் படுத்திக்கொள்ளுங்கள். ஈஸ்வர கிருபையால் நாம் படுகுழியிலிருந்து உத்தாரணம் செய்யப்பட்டுவிட்டோம். நமக்கு வெற்றியும் கிடைத்துவிட்டது.

வி வி வி வி வி

**வட ஆபிரிக்க சரித்திரம்.** மகத்தான உலக யுத்தத்தில் வட ஆபிரிக்க யுத்தமானது ஒரு சிறிய சம்பவமாகிலும் அது ஒரு புராணக் கதை போல் இருக்கிறது. இந்த யுத்தத்தில் நேசநாடுகளுக்கு ஏற்பட்ட வெற்றிகளையும், தோல்விகளையும் நாம் கண்டிருக்கிறோம். பிரான்ஸ் விழுந்த பிறகு இதாலி யுத்தத்தில் இறங்கி பிரிடிஷ் ஸோமாலிலாந்தைப் பிடித்துக்கொண்டது. பிறகு ஆச்சரியமான ஒரு சம்பவம் ஏற்பட்டது. பீல்ட் மார்ஷல் வேவல் ஒரு சிறிய படையுடன் மார்ஷெல் கிராஸியானியை எல் அகிலா வரையிலும் துரத்தியடித்து அவனுடைய துருப்புகளையும் அழித்துவிட்டார். இதற்குப் பிறகு ரோமல் பூதத்தின் தோற்றம் ஏற்பட்டது. ஜெர்மன் ஆபிரிக்கப்படைகள் பிரிடிஷ் துருப்புகளைத் துரத்தியடித்து எகிப்து எல்லைக்கு வந்துவிட்டன. இதற்குப்பின் பிரிடிஷார்கள் ஸோமாலிலாந்தையும், எரிட்ரியாவையும், அபிஸீனியாவையும் பிடித்தார்கள். கோரமான டாங்கிகள் யுத்தம் நடைபெற்று, ஜெனரல் ஆசின்லக்கின் அதிகாரத்துக்குட்பட்ட எட்டாம்படை ரோமலை எல் அகிலாவுக்குத் துரத்தியடித்தது. ஆச்சரியப்படத்தக்க தீரத்துடன் ரோமல் பதில் தாக்குதல் செய்ய ஆரம்பித்து மறுபடியும் எட்டாம்படையைத் துரத்தியடித்துக்கொண்டே அலெக்ஸாண்டிரியா சமீபம் வந்துவிட்டான். பிறகு சரித்திரத்தில் கியாதிபெற்ற ஜெனரல் மாண்ட்காமரியின் முன்னேற்றம் ஆரம்பமாயிற்று. அதி வேகம் பொருந்தியது. சென்ற புதன்கிழமையன்று யுத்தம் முடிந்தது. ஆபிரிக்கா கண்டத்தை விட்டு அச்சுப்படைகள் காலி செய்யப்பட்டுவிட்டன. யுத்தம் ஆரம்பித்து மூன்று வருஷங்களாகிவிட்டன. பிரிடிஷ் அமெரிக்கத் துருப்புகள் மொராக்கோவிலும் ஆல்ஜீயர்ஸிலும் இறங்கிய ஆறு மாதங்களுக்குள்ளாக வெற்றி கிடைத்துவிட்டது.

வி வி வி வி வி

**வெற்றிக்கு ஜவாப்தாரி.** வெற்றியில் பிரிடன், சாம்ராஜ்ய நாடுகளுக்குப் பெரும் புகழ் கிடைத்தது. இதில் அமெரிக்கத் துருப்புகளும் வடஆபிரிக்காவிலுள்ள ஸ்வதந்திரத் துருப்புகளும் ஒத்துழைத்தார்கள். இந்த வெற்றிக்குக் காரணம் யுத்த தளவாடங்களும், துருப்புகளும் உயர்வான சேனாதிபதிகளின் யுத்த தந்திரமும்தான். நேராக யுத்தம் செய்யாமலும், மிகவும் நெருக்கடியான சமயத்தில் யுத்தத்தில்

இறுதியில் வெற்றி நமக்குத்தான் என்று பறைசாற்றுபவரும் சோர்வடையாத ஊக்கத்துடனும், தைரியத்துடனும் நேசநாடுகளை உத்சாகப்படுத்தி, வெற்றிபெறும் படியாகச் செய்த ஒருவரைப்பற்றி விசேஷமாகக் சொல்லவேண்டும். இவர்தான் மிஸ்ட்டர் சர்ச்சில். தெய்வப் பிறப்பு என்று சொல்லவேண்டும். மாக்ஷிமை தங்கிய மன்னர்பிரான் சொன்னபிரகாரம் மிஸ்ட்டர் சர்ச்சிலுக்கு உலகம் பூராவும் நன்றி செலுத்தவேண்டும்.

வி வி வி வி வி

**அச்சு நாடுகளின் திடீர் வீழ்ச்சி.** டுனிஸியாவும், பிஸர்ட்டாவும் விழுந்த சுருக்கைவிட எதிர்பாராதவண்ணமாக, கேப் பான் தீபகற்ப யுத்தம் திடீரென முடிந்தது. காமன்ஸ் சபையில் மே மாதம் 11-ம் தேதியன்று டுனிஸ், பிஸர்ட்டாவின் வீழ்ச்சியை உதவி பிரதம மந்திரியான மிஸ்டர் C. R. அட்லி பிரஸ்தாபித்தபொழுது "பாக்கி நாடகம் எவ்வளவு நேரம் நடக்குமென்று சொல்லுவதற்கில்லை. எதிரி எதிர்த்து நிற்பானென்றும் தப்பி ஓடிவிடுவானென்றும் சொல்லவும் முடியாது" என்று சொன்னார். அவர் பேசி நான்கு நாட்களுக்குள்ளாகவே யுத்தம் முடிவடைந்துவிட்டது. அச்சுப் படைகள் சரணடைந்து விட்டன. அச்சுப் படைகளின் தளகர்த்தர்கள் சரணடைந்தார்கள் அல்லது பிடிபட்டார்கள்.

வி வி வி வி வி

**நேசநாடுகளின் யுத்த தந்திரம்.** இந்த வெற்றிக்கு நேசதேசப்படைகள் செய்த யுத்த தந்திரம் தான் காரணம். அச்சுநாட்டுப் படைகளை 8-ம் படை தேக்கி வைத்துக் கொண்டிருந்தபொழுது 1-வது படையும் 8-ம் படையைச் சேர்ந்த 3 டிவிஷன்களும் சேர்ந்து எதிரியின் பலஹீனமான பக்கத்தை பலமாகத் தாக்கி விட்டன.

வி வி வி வி வி

**நாலாவது இந்தியப்படையின் தீரம்.** இதாலிய சேனாதிபதியான ஜெனரல் மாஸி எட்டாம் படையிடம் சரண்புகுந்தார். கேப்ஸை விட்டு ரோமல் ஓடிப்போனபின்பு அச்சுப் படைகளுக்கு தளகர்த்தராயிருந்த வான் ஆர்ணிமைக் கைதி செய்த புகழ் நாலாவது இந்தியப் படையைச் சேர்ந்தது. இதே படைதான் டுனிஸை வெற்றிகரமாகப் பிடித்தது.

வி வி வி வி வி

**அச்சு நாடுகளுக்கு நஷ்டம்.** அச்சு நாடுகளுக்கு ஏராளமான நஷ்டம் ஏற்பட்டுவிட்டது. டுனிஸியாவில் மட்டும் 1,50,000 முதல் 1,70,000 பேர்கள் கைதி செய்யப்பட்டுவிட்டார்கள். (இவர்களில் மூன்றில் இரண்டு பாகம் ஜெர்மானியர்கள். இவர்களில் 17 ஜெனரல்களும், (14 ஜெர்மானியர்கள்), 3 பான்ஸர் படைகளும், 1,000 பீரங்கிகளும், 250 டாங்கிகளும், ஆயிரக்கணக்கான வண்டிகளும் நமது வசமாகிவிட்டன. லிபியா நஷ்டத்தையும் சேர்த்தால் நஷ்டக்கணக்கு 6,00,000 மனிதர்களாகவும் (2,50,000 ஜெர்மானியர்களும்), 2,700 விமானங்களுமாக இருக்கும்.

வி வி வி வி வி

**வெற்றியின் பிரயோஜனங்கள்.** இதன் விளைவுகள் அதிகமானவை. ருஷ்யா புதியதாக்குதல் செய்வதற்கு ஊக்கம்பெற்றுவிட்டது. அராபிய நாடுகள் சந்தோஷமடைகின்றன. மேற்குப்பக்கத்திலிருந்து இந்தியாவுக்கு இருந்த பயம் நீங்கி விட்டது. கிழக்கேயிருக்கும் எதிரியைத் தாக்குவதற்கு அதற்குத் தைரியம் உண்டாகிவிட்டது.

எதிரிக்கு மனோதைரியக் குறைவு ஏற்பட்டுவிட்டது. டுனிஸியாவில் ஜெர்மானியர்கள் திடீரென்று வீழ்ச்சியுற்றதுபோல ஐரோப்பாவிலும் அவர்கள் குலைந்துவிடுவார்களென்று டாக்டர் பெனஷ் சொல்லுகிறார்.

வி வி வி வி வி

**ஜெர்மனியில் கலவரம்.** ஆபிரிக்கத் தோல்வியின் பயனாக பெர்லின் நகரத்திலும் மற்ற இடங்களிலும் கலவரம் உண்டாகிவிட்டது. சரண்புகுந்த ஆபிரிக்கப் படையிலிருக்கும் தங்கள் உறவினர்களின் கதி என்ன ஆகிவிட்டதென்று கவலைப்படும் ஜனங்கள் கலவரம் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள்.

**சமாதானப் பேச்சு** அச்சுநாடுகளின் சார்பாக சமதானம் செய்ய பிராங்கோ முன்வந்திருக்கிறுன். நேசநாடுகளின் சார்பாக, சமாதானம் வேண்டுமானுல் அச்சுநாடுகள் நிபந்தனையற்ற சரணுகதி செய்யவேண்டுமென்று மிஸ்ட்டர் ஈடன் ஏற்கனவே சொல்லியிருக்கிருர். பிராங்கோவின் தலையீட்டுக்கு அமெரிக்காவும் சரியான பதிலுரைத்து எச்சரிக்கையும் செய்திருக்கிறது. ராட்டர்டாமை ஜெர்மானியர்கள் தயையன்னியில் வெடிகுண்டுகளால் தாக்கிய முறைகளையும், டூனிஸியாவில் இப்பொழுது ஜெர்மனியர்கள் சீக்கிரமாகச் சரணடைந்ததையும் ஒப்பிட்டு அமெரிக்க யுத்த அறிக்கை இலாகாத் தலைவரான மிஸ்ட்டர் எல்மார் டேவிஸ் என்பவர் பின்வருமாறு சொன்னுர்:—

"தப்பி ஓடுவதற்கு சந்தர்ப்பம் வாய்த்தால் எவ்வளவு சிலாக்கியமாக எதிரிகள் ஓடிவிடுவார்களென்பதை ஞாபகப்படுத்திக்கொள்ளுங்கள். டூனிஸியா மலைச்சரிவுகளில் ஜெர்மானியர்கள் சந்தோஷமாக சரணடைந்தார்களென்பதில் ஒரு ஆச்சரியமில்லை. தன்னை ஜாமினில் விடுவதற்காக தன்னுடைய வக்கீல் மனுச் செய்துவிட்டாரென்ற ஒரு குற்றவாளி தாளுகவே சந்தோஷமாக ஆஜராகுவது போலிருக்கிறது.

"தங்களுடைய ராஜீய நிபுணர்களும், பிரசாரகர்களும் சமாதான உடன்படிக்கையை ஏற்பாடு செய்து விடுவார்களென்று சிலர் நினைத்துக்கொண்டிருக்கலாம்.

"ஸ்பெயின் தேசத்தின் யதேச்சாதிகாரியான ஜெனரல் பிராங்கோ சமீபத்தில் இவ்விதமாகப் பேச ஆரம்பித்திருக்கிருன. சென்ற வேனீர் காலத்தில் தாராள மனப்பான்மையுள்ள உலகம், குறைகள் மூலமாக அழிவுபெற்று வருகிறதென்று ஜெனரல் பிராங்கோ சொன்னுன். தாராள மனப்பான்மையுள்ள உலகம் என்று அவர் சொன்னது, ஜனநாயகமும், ஸ்வதந்திரமும் பொருந்திய நமது உலகத்தைத்தான் அவர் குறிப்பிட்டார்போலும்.

"அச்சுநாடுகள்தான் வெற்றிபெறப் போகிறதென்று அவர் நிச்சயமாக நம்பினுர். டூனிஸும், பிஸர்ட்டாவும் விழுந்த இரண்டுநாட்களுக்குப்பின் ஜெர்மன் படைகளில் பாக்கியிருந்தவைகளை எல்லாம் நாசமாக்கி வரும்பொழுது, இருதரப்பாரும் யுத்தத்தில் வெற்றி பெறமுடியாது, ஆகையால் இப்பொழுதே சமாதானம் செய்துகொள்ளலாமென்று ஜெனரல் பிராங்சோ கண்டுபிடித்தது விந்தையாகயிருக்கிறது.

"தன்னுடைய அரசாங்கத்தின் க்ஷேமத்தை உத்தேசித்து ஜெனரல் பிராங்கோ சமாதான உடன்படிக்கை செய்துகொள்ளவேண்டுமென்று விரும்புகிருனென்பதற்கு நல்ல முகாந்திரங்களிருக்கின்றன. இது பிராங்கோவின் சொந்த அபிப்பிராயமாக யிருந்தாலும் சரி, அல்லது மற்றவர்களுடைய யோசனையை வெளியிடுவதாகயிருந்தாலும் சரி, இது அமெரிக்காவில் எடுபடவில்லை. அங்குள்ளவர்கள் அமெரிக்காவும், பிரிடனும், ருஷ்யாவும் எதிரிகளை நிபந்தனையற்ற சரணுகதி செய்யும்படி கட்டாயப்படுத்துவோமென்று தீர்மானம் செய்துவிட்டதாகச் சொல்லிவிட்டார்கள்.

"இது முதற்கொண்டு, ஜெர்மன் படையைச் சேர்ந்த ஒவ்வொருவரும், ஜெயிலிலும், காவல் முகாமிலுமுள்ள காமப்புரட்சி வெறிகொண்ட ஒவ்வொரு காவலாளியும், ஒவ்வொரு நெருப்புக்கக்கும் வெடிகுண்டெறிகிறவனும், குழந்தைகளுடைய உணவு வசதிகளைக் கொள்ளையடிப்பவனும், நமது லக்ஷியத்துக்குட்பட்டவன். ஜெர்மானியர்கள் கைவிட்டுவிட்டவர்கள் நாசமடைவார்கள். அம்மாதிரியான கதி ஏற்படவேண்டாமென்று ஜெர்மானியர்கள் நினைத்தால் நல்ல முறையில் இனிமேல் நடந்துகொண்டு மன்னிப்பு கேட்டுக்கொள்ளட்டும். இந்தப் புத்திமதி ஜப்பானுக்கும் அன்வயிக்கும்."

வி வி வி வி வி

**இதாலியின் கதி.** மிஸ்ட்டர் டேவிஸ் தன்னுடைய பிரகடனத்தில் இதாலியையும் சேர்த்துக்கொள்ளவில்லையென்ருல், இதாலிக்கு தண்டனை ஏற்கனவே ஆரம்பமாகிவிட்டது. முஸோலினியின் அமித கல்பனைகள் கனவாக ஆகிவிட்டன. இந்துமகாசமுத்திரம் வரையில் இதாலிய சாம்ராஜ்யத்தை விஸ்தாரம் செய்ய வேண்டுமென்று இதாலி நினைத்த நினவு அழிந்து போய்விட்டது.

அரசாங்க சபை மந்திரிகள் ராஜினுமா. விக்டர் ஏமானுவல் பட்டம் துரப்பது; பொடாக்லியோ திரும்பி ராஜ்யத்துக்கு வருவது, ராணுவ சங்கம் ஏற்படுத்த சரணுகதிக்கு வேண்டிய ஷரத்துக்களை நிர்த்தாரணம் செய்வது போன்ற அநேக காரியங்கள் இதாலியில் நடைபெற்று வருகின்றன.

இதாலிய ஜனங்கள் யுத்தத்தை வெறுக்கிறார்கள். யுத்தத்தை நிறுத்துவதற்கு நிச்சியமானதும் சீக்கிரமானதுமான மார்க்கம் நேசநாடுகளின் படையெடுப்புத்தான் என்றும் அதை வரவேற்கிறார்கள்.

இதாலியர்கள் ஏராளமான கஷ்டங்களை அனுபவித்திருக்கிறார்கள். வருங்காலத்தில் உண்டாகப்போகும் கஷ்டங்களை நினைத்து மனம் கலங்குகிறார்கள். சர்ச்சில் சொன்ன பிரகாரம் இதாலி பூராவையும் இடைவிடாது சாஸ்திரமுறைப்படி விமானப்படை தாக்கும் சமயம் கிட்டிவிட்டது. தங்களுடைய கெட்ட தலைவரின் குற்றங்களுக்கும் பாபச் செய்கைகளுக்கும் அவர்களுக்கு சிக்ஷை ஏற்படப்போகுமென்று நினைத்து அவர்கள் பயப்படுகிறார்கள். அக்குற்றங்கள் பிரான்ஸ் விழுந்தபொழுது பின் பக்கத்தில் தாக்கியதும், கிரீஸை அக்கிரமாகத் தாக்கியதுமே ஆகும்.

வி வி வி வி வி

**அடுத்த தாக்குதல்.** அடுத்தபடியாக தாக்குதல் எங்கு ஏற்படுமென்று அநேக அனுமானங்கள் கிளம்பிவிட்டன. இப்பொழுது நடைபெற்றுவரும் வாஷிங்டன் மகாநாடு ஆரம்பமாகும்முன் கர்னல் நாக்ஸ் என்பவர் "ஸிஸிலி அச்சுநாடுகள் வசமிருக்கும் வரையில் நேசதேச நடவடிக்கைகளுக்கு அபாயம் ஏற்படும். ஸிஸிலி நமது வசமாகிவிட்டால் ராணுவமுறையில் அது பெரிய லாபமாகும்" என்று சொன்னார்.

இது உண்மைதான். நேசநாட்டார் வசமாகிவிட்ட டூனிஸியாவுக்கும், ஸிஸிலியின் மேற்குமுனைக்கும் நடுவில் சீசாக்கழுத்துப்போன்ற குறுகிய கடலானது 100 மைல்களுக் குட்பட்டதாக இருக்கிறது. மத்தியதரைக்கடலின் மேற்குப்பக்கத்திலிருந்து கிழக்குப் பக்கத்துக்கு நேசதேசக் கப்பல்கள் இந்தக் குறுகிய மார்க்கத்தில் சாவதானமாகச் செல்ல முடியாது. அத்துடன் ஸிஸிலியிலுள்ள வல்லரசுதான் இதாலியையும் காப்பாற்ற முடியும்.

வி வி வி வி வி

**ஸிஸிலி.** ஆகையால், ஐரோப்பாவிலேயே ரமணீயமான பிரதேசமானதும், அநேக ஜாதியார்களுள்ளதும், இதாலிய நாகரீகத்துக்கு ஆதார பூமியும், பிராசீனத்திலும், நவீன காலத்திலும், கிரேக்கர்கள், ரோமர்கள், கார்த்தஜீனியர்கள், யூதர்கள், பைஸாண்டியர்கள், ஹூணர்கள், பிரெஞ்சுக்காரர்கள், ஸ்பானியர்கள் எல்லோரும் யுத்தம் புரிந்த அரங்கமும், 1860-ம் வருஷத்தில் காரிபால்டி என்பவர் ஸ்வதந்திரத்துக்காகச் சண்டைசெய்ய தன்னுடைய செஞ்சட்டைப்படையுடன் இறங்கியதுமான இந்த ஸிஸிலித் தீவானது மறுபடியும் ஸ்வதந்திரத்தை நிலை நாட்டுவதற்காக முக்கியப் போர்களமாக ஆகப்போகிறது.

ஆகிலும் சண்டையானது கடுமையாக நடைபெறும். ஸிஸிலி பெரிய அரண். பாலர்மோ என்னுமிடத்தில் குகைகளில் ஏராளமாக எண்ணெய் சேமிப்புகளிருக்கின்றனவாம். ஆகிலும் நேசநாடுகளுக்கு ஒரு சௌகரியமிருக்கிறது. ஸிஸிலியின் தெற்குக்கரைக்கு ரக்ஷணையில்லை.

வி வி வி வீ வி

**பான்டலேரியா.** இது மற்றொரு தீவு. இதையும் நேசநாடுகள் தாக்கலாம். இது பான்டலேரியா என்னும் கவியின் பெயரையுடையது. இதை ஏராளமான வெடி விமானங்கள் தாக்குவதிலிருந்தே இதன் முக்கியத்வம் வெளிப்படுகிறது. பான்டலேரியா என்பது குன்றுகளுள்ள தீவு. ஸிஸிலிக்கும் டூனிஸூக்கும் மத்தியிலுள்ளதென்று சுமாராகச் சொல்லலாம். குறுகிய கடலைக்காப்பதற்கு இது இதாலிக்கு முக்கியமான ஒளிவு ஸ்தலம். 1936-ம் வருஷம் முதற்கொண்டே இந்தத் தீவின் பேரில் அந்நிய விமானம் செல்லக்கூடாதென்று முஸோலினி உத்தரவிட்டிருக்கிறான். இதில் நீர்மூழ்கி தளங்களும், மலைப்பிரதேசங்களில் விமான தளமும், கடல் விமான தளமாக உபயோகப்படக்கூடியதும், எரிமலைப் பள்ளத்தில் பரவியிருக்கிறதுமான ஒரு ஏரியும் இருக்கிறது.

வி வி வி வீ வி

**வாஷிங்டன் மகாநாடு.** மிஸ்டர் சர்ச்சிலும் அவனுடைய ராணுவ ஆலோசகர்களும் மற்றும் சிலரும் வாஷிங்டனுக்குச் சென்று ஜனாதிபதி ரூஸ்வெல்டுடன் சம்பாஷணை செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். சர்ச்சிலும் ரூஸ்வெல்டும் இப்பொழுது ஐந்தாவது தடவை கூடிப்பேசுகிறார்கள். இதிலிருந்து மகத்தான

விளைவுகள் ஏற்படக்கூடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. சமுத்திரமத்தியில் நடைபெற்ற சந்திப்பின் பயனாக அட்லாண்டிக் சாஸனம் நிறுவப்பட்டது. ஜனாதிபதியின் காரியாலயத்தில் நடந்த மீடிங்குப்பின் ஆங்கிலேய—அமெரிக்க ஒற்றுமை ஏற்பட்டது. மூன்றாவது தடவை வாஷிங்டனில் நடைபெற்ற மகாநாட்டிலிருந்து வடஆபிரிக்கா யுத்த திட்டம் முடிவு செய்யப்பட்டது. நான்காவது, கஸாபிளாங்கா மகாநாட்டின் விளைவாக வடஆபிரிக்க வெற்றியேற்பட்டது. இப்பொழுது நடைபெறும் ஐந்தாவது மகாநாட்டின் முடிவாக முக்கியமான மகத்தான விளைவுகள் ஏற்படக்கூடும். ஐரோப்பாவை படையெடுப்பதும் அச்சுநாடுகளை நாசம் செய்வதும், முடிவு செய்யப்படலாம். இந்த மகாநாடு யுத்த தந்திரத்தையும் ராணுவ அவசியத்தையும் பற்றித்தான் விவாதிக்கிறதென்றும் சொல்லப்படுகிறது.

வி வி வி வி வி

**ஜப்பானைத் தாக்குவது.** வாஷிங்டனுக்கு வேவலும் அவருடன் கடற் தளபதி ஸர் ஜேம்ஸ் ஸோமர்வில்லும், விமானப்படை அதிகாரியான ஸர் ரிச்சர்ட் பியர்ஸும், இந்தியத் தரைப்படை, கடற்படை, விமானப்படைகளின் அதிகாரிகள் என்ற முறையில் சென்றிருக்கிறார்கள். ஆகையால் இந்தியாவைத் தளமாகக்கொண்டு ஜப்பானை எவ்விதம் முன்னேறித் தாக்குவது என்ற விஷயம் ஆலோசனைக்கு வருமென்று அனுமானிக்கலாம்.

மேன்மை தங்கிய வைஸ்ராய் அவர்கள் மேமீ 21-ம்வ ஒலிபரப்புப் பிரசங்கத்தில் சொல்லிய வார்த்தைகளில் விசேஷமிருக்கிறது.

"அச்சு நாடுகளை நொருக்கி, அவனுடைய கர்வத்தை மண்ணோடு மண்ணாய்க் கலக்கும்படி செய்துவிட்ட பிறகு, ஜப்பானிய பயத்தை ஒழிக்கவேண்டும். காலக்கிரமத்தில் நாம் கொண்டுவரப்போகும் படைகள் நிச்சயமாக அவனை முறியடித்துவிடும்."

வி வி வி வி வி

**மால்டாவின் ஆக்ஷேபம்.** ஜெர்மனியில் அடிமைத்தொழில் புரிவதற்காக ருஷ்ய ஜனங்களை அப்புறப்படுத்துகிறான் என்பதை ஆக்ஷேபித்து மாலடோவ் எழுதியிருக்கும் கடிதம் இப்பொழுது பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இதில் முக்கியமாக இரண்டு குற்றச்சாட்டுகளிருக்கின்றன. இந்த விஷயத்தில் கோயரிங் அதிகார முறையில் உத்தரவு பிறப்பித்திருக்கிறானாம். இதிலிருந்து அடிமைத்தனமெனபது திட்டமாக நடைபெற்றுவருகிறதென்றும் அடிமைகளைப் பிடித்து அனுப்புவது அரசாங்க இலாகாவின் தனிப்பட்ட வேலையென்றும், இதற்கு நிர்வாகமும், சிப்பந்திகளும் ஏற்பட்டிருக்கிறார்கள் என்றும் தெரியவருகிறது. அடிமை வேலைசெய்ய மறுதளித்தவர்களுக்கு ஆகாரம் கொடுக்கக் கூடாதென்றும் ராணுவச் சட்டப்படி அவனுக்கு மரண தண்டனையும் விதிக்கவேண்டுமென்றும் கோயரிங் உத்தரவிட்டிருக்கிறான். திட சரீரமும், வாலிபமும் பொருந்திய 50,000 ருஷ்ய இளம் மாதர்களை ஜெர்மனிக்கு அனுப்பும்படியாக ஹிட்லர் மாகாண கவர்னரான ஸாக்கலுக்கு உத்தரவுபோட்டிருக்கிறான். உத்தரவைப் பூர்த்திசெய்ய ஸாக்கல் என்பவன் வாலிபர்களைப் பட்டினி போட்டு, ஆகாரம் கொடுக்கிறோமென்று ஆசை வார்த்தைகூறி அவர்களை ரயில்வே ஸ்டேஷன்களுக்குக் கூட்டிக் கொண்டுபோய், சுட்டுவிடுவோமென்று பயமுறுத்தி அவர்களை ரயில் வண்டிகளில் ஏற்றி அனுப்பிவிடுகிறான்.

வி வி வி வி வி

**ஆக்கிரமிப்பு ஐரோப்பாவின் மனப்பான்மை.** மே மாதம் 10-ம் தேதியாகிய திங்கட்கிழமையன்று, பெல்ஜியம், நெதர்லாந்து, லக்ஸம்பர்க் முதலிய மூன்று இடங்களை ஜெர்மனி ஆக்கிரமித்து மூன்று வருஷங்கள் முடிவுற்றன. படை பல மிகுதியால் தோற்கடிக்கப்பட்டபோதிலும் அவர்களுடைய ஆன்மா தோல்வி பெறவில்லையென்று ஸ்பஷ்டமாகத் தெரியவருகிறது. லக்ஸம்பர்க் எதிர்த்து நிற்க முடியாத நிலையில் இருந்தபோதிலும் சரணடையமாட்டோமென்று தன்னுடைய மரியாதையை நிலை நாட்டிற்று. நீங்கள் ஜெர்மானியர்களாக வேண்டுமென்று ஹிட்லர் கோரிய பொழுதும், லக்ஸம்பர்க் ஜனங்கள் விரோதிகளாகவேயிருக்க தீர்மானித்துவிட்டார்கள். லண்டனிலிருக்கும் லக்ஸம்பர்க் அரசாங்கம் அச்சு நாடுகள் கக்ஷியையும் ஸ்வதந்திர முறையையும் ஆதரித்து நிற்கிறது.

18 நாட்கள் யுத்தம் செய்தபிறகு தோல்வியுற்ற பெல்ஜியமும் ஹிட்லருடன் தனிப்பட்ட முறையில் ஒரு ஒப்பந்தமும் இதுவரையில் செய்துகொள்ளவில்லை. 1940-ம் வருஷம் மேமீ

10-ம் தேதிக்கு முன் லெபால்டு மன்னரின் கீழிருந்த மந்திரிகள் பெல்ஜியன் காங்கோவில் உள்ள எல்லா ஐச்வர்யங்களையும் நேசநாடுகளுக்கு அர்ப்பணம்செய்து நேசநாடுகளுடன் கலந்துகொண்டு போர் புரிகிறார்கள்.

நாசவேலை, சட்ட மறுப்பு, கபடமான எதிர்ப்பு போன்ற முறைகளெல்லாம் ஹாலந்தில் நடைபெறுகின்றன. ஹாலந்தில் கட்டாயப்படுத்தபடும் டச்சுத் தொழிலாளர்களெல்லாம் ஏராளமான உளவு சொல்லுவதும், நாசவேலை செய்வதுமாக இருந்துவருகிறார்கள். ஹாலந்திலுள்ள ஜெர்மன் தளகர்த்தரான ஜெனரல் கிரிஸ் டியன்ஸென் என்பவர் 1942-ம் வருஷம் மே மாதத்தில் விடுதலை செய்யப்பட்ட டச்சுச் சேனையைச் சேர்ந்த ஆபீஸர்களையும் துருப்புகளையும் மறுமடியும் கைதி செய்துவிட்டான்.

வி வி வி வி வி

**திடீர் தாக்குதல் அல்லது மெதுவாக நழுவவிடுவது என்ற வெடிகுண்டு போடும் முறைகள்.**

இடைவிடாது விமானப்படையேற்படுவதிலிருந்து வெடிகுண்டுவீசுவதில் புதிய முறைகள் அனுஷ்டிக்கப்படுகின்றன. அமெரிக்கா 10-வது விமானப்படையின் தலைவரான ஜெனரல் பிஸ்ஸல் என்பவர் 100 பவுண்டு வரையில் எடைமானமுள்ள வெடிகுண்டுகளை சரியான குறிப்புடன் வீசுவதற்கு ஒரு உபாயம் கண்டுபிடித்திருக்கிறார். தென்மேற்கு பஸிபிக்கிலிருந்து மற்றொரு புதிய முறை ஏற்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இந்த உபாயத்தை மார்ச்சு மாதம் 6-ம் தேதியன்று பிஸ்மார்க் கடல் யுத்தத்தில் உபயோகப்படுத்தினார்கள். எதிரிக்கு 10 துருப்புக் கப்பல்களும், 12 சண்டைக் கப்பல்களும் நஷ்டமாகின. ஏப்ரல் 14-ம் தேதி முதல், ஏப்ரல் 28-ம் தேதி வரையில், ஜப்பானியர்களுக்குத் தென்மேற்கு பஸிபிக்கில் 90,000 டன்கள் எடைமானமுள்ள கப்பல்கள் நஷ்டமாகியிருக்கின்றன. ஆகையால் திடீரென்று போடுவது அல்லது மெதுவாகத் தள்ளிவிடுவது என்ற இருவகைப்பட்ட வெடிகுண்டுவீசும் முறைகளை கவனிப்போம்.

இந்த முறைகளின் பலனாக அர்த்த ஆகாயப் பரப்பில் வேலை செய்யக்கூடிய அமெரிக்க பறக்கும் கோட்டை விமானங்கள் கப்பல் மேல் தட்டின் உயரத்திலிருந்து மீன் வெடிகளை வீசும் விமானங்களாக மாறிவிட்டன. விமானத்தின் வேகத்தின் சாதுர்யத்தினால் அது கனமான ஒரு வெடிகுண்டை ஒரு குட்டையில் கூழாங்கல்லைத் தண்ணீர் பரப்பில் நழுவவிடுவது போல மெதுவாகத் தள்ளிவிடும். கப்பலின் தண்ணீர் மட்டத்தில் வெடிகுண்டு அடிப்பதற்கு இதிலிருந்து வசதியேற்படுகிறது.

லக்ஷியமான கப்பலுக்கு அதிக சிரமமேற்படும் கப்பல் மேல்தட்டின் மட்டத்தில் வரும் வெடி விமானத்தைத் தாக்க பீரங்கிகளைத் தாழ்த்துகிறதென்பது சிரமமான காரியம். வெடிகுண்டுகள் ஜலமட்டத்தில் தாவி வந்து கப்பலின பக்கத்தில் மீன் வெடிகள் போலத் தாக்கித் துளைத்துவிடும். வெடிகுண்டுகளைச் செங்குத்தாகத் தள்ளி அவைகள் தண்ணீருக்குள் மூழ்கினால், அவைகள் தண்ணீருக்குள் முன்பக்கமாகச் சென்று கப்பலுக்கருகில் வெடித்துவிடும். அவைகளைத் தாமதமாகப் போட்டால் அவைகள் கப்பலின் மேல் தட்டையோ அல்லது மேல் கட்டடத்தையோ பழுது செய்யும். இந்தப் புதிய வெடி விமானம் போடும் முறையை வாஷிங்டனிலுள்ள மேஜர் வில்லியம் பென் என்பவர் நியூ கினியாவில் கண்டுபிடித்தார்.

## கடல் யுத்தம்—சாமான் கப்பல்களின் நிலைமை.

ஏப்ரல் 28-ம் தேதியன்று அமெரிக்கக் கடற்படை தூது கோஷ்டியின் அக்கிராசனரான உதவி கடற்தளபதி லாண்டு பின்வருமாறு பேசினார்.

"பிரதம மந்திரி சர்ச்சில் பிரிடிஷ் ஜனங்களிடம் ஒரு வருஷத்துக்கு முன்னிருந்ததைவிட இப்பொழுது நேசதேசத்தார்களிடம் சாமான் கப்பல்கள் அதிகமாகயிருக்கிறதென்று சமீப காலத்தில் வெளியிட்டார். இந்த அபிப்பிராயத்தின் உண்மையை நாம் ஆமோதிக்கிறோம். அத்துடன் யுத்தம் ஆரம்பித்தது முதல் இதுவரையிலும், இச்சமயத்திலும் நம்மிடம் கப்பல்கள் குறைவாகவேயிருக்கின்றன என்றும் சொல்லவேண்டியிருக்கிறது. யுத்தம் நடைபெறும் வரையில் இந்தக் கப்பல் குறைவு இருந்தே தீருமென்றுதான் என்னுடைய அபிப்பிராயம்.

"நம்மிடம் 30-க்கு மேற்பட்ட கப்பல் கட்டும் ஸ்தலங்களும், 250-க்கு மேற்பட்ட கப்பற்துறைகளுமிருக்கின்றன. அவைகளில் கடல் தாண்டிச்செல்லக்கூடிய சாமான் கப்பல்கள்

கட்டப்படுகின்றன. இதைத்தவிர 40 தொழிற்சாலைகளில் பலவகைப்பட்ட உதவி கப்பற் படை தயார் செய்யப்படுகிறது. சாமான் கப்பல்களுக்கு உதவிப்படையும், தரைப்படைகளுக்கு உதவிப்படையும், மற்றவைகள் குத்தகைக்கடன் திட்டத்துக்கு உதவக்கூடிய வகையாகவும் கட்டப்படுகின்றன. அமெரிக்காவிலுள்ள 48 தொழிற்சாலைகளில் 24-ல் இவ்வித வேலைகள் நடைபெற்று வருகின்றன."

## ஏப்ரல் மாதத்தில் நஷ்டம் மிகவும் குறைவு.

ஏப்ரல் 30-ம் தேதியன்று அமெரிக்கக் கடற்படை காரியதரிசியான கர்னல் நாக்ஸ் சொன்னதாவது.

"மார்ச்சு மாதத்தில் இருந்ததைவிட ஏப்ரல் மாதத்தில் கப்பல் நஷ்டங்கள் மிகவும் குறைவானது. சென்ற நான்கு மாதங்களில் நீர்மூழ்கிகளை எதிர்த்துச் சண்டைபோடுவதற்கு உதவியாகக் கப்பற்படையையும் விமானப் படையையும் அதிகப்படுத்திவருகிறோம்." இன்னும் நான்கு முதல் ஆறுமாதங்களுக்குள்ளாகவே எதிரி நீர்மூழ்கிகளின் அட்டகாசத்தை அடக்கி விடுவோமென்று இங்கு கடற்தளபதி சொல்லுவதை அவரும் ஒப்புக்கொள்ளுவதாகவும் சொன்னார்.

ஏப்ரல் 30-ம் தேதியன்று கனேடிய கடற்படை மந்திரி மிஸ்ட்டர் மாக்டனால்டும், கனேடிய விமான மந்திரி மிஸ்ட்டர் பவரும், வாஷிங்டனில் நடைபெற்ற நீர்மூழ்கி எதிர்ப்பு மகாநாட்டில் போடப்பட்ட திட்டங்களைப்பற்றி கூட்டு அறிக்கை வெளியிட்டார்கள். வடமேற்கு அட்லாண்டிக்கில் கனேடிய கடற்படையின் உதவி கடற்தளபதியான L. W. மர்ரே என்பவர் சேனாதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். அட்லாண்டிக்கின் மத்தியபாகத்தில் ரோந்து செய்துவரும் கனேடிய, அமெரிக்க விமானங்களின் நடவடிக்கைகளை ஒரு அமெரிக்க உத்தியோகஸ்தர் கவனித்து வருவார். பிரிடிஷ் வெடி விமானங்களும் மற்றொரு பக்கத்தில் ரோந்து செய்துவரும். இவ்விதமாக வடஅமெரிக்காவிலிருந்து ஐரோப்பா வரையிலுள்ள அட்லாண்டிக் கடல் மார்க்கம் பூராவும் விமானப் பாதுகாப்பு செய்யப்பட்டுவிடும்.

## 1942-ம் வருஷத்திய நஷ்டங்கள்.

1942-ம் வருஷத்தில் நேசநாடுகளின் கப்பல் உற்பத்தியைவிட 1-மிலியன் டன்கள் எடைமானமுள்ள கப்பல்கள் அதிகமாக நஷ்டமாகியிருக்கின்றன என்று ஏப்ரல் மாதம் 27-ம் தேதியன்று அமெரிக்கக் கடற்படை இலாகா வெளியிட்டார்கள். அமெரிக்காவில் உத்தியோக முறையில் வெளியிட்ட விபரங்களிலிருந்து 1942-ம் வருஷத்தில் அமெரிக்கக் கப்பல் கட்டும் தொழிற்சாலைகளில் 56,63,560 குரோஸ் டன்கள் எடைமானமுள்ள சாமான் கப்பல்கள் கட்டப்பட்டன. அந்த வருஷத்தில் பிரிடிஷ் அமெரிக்கக் கப்பல் கட்டும் தொழிற்சாலைகள் உற்பத்தி செய்ததையும் சேர்த்தால் மொத்தமாக நேசதேசத்தார்கள் 1942-ம் வருஷத்தில் 8-மிலியன் டன்கள் எடைமானமுள்ள கப்பல்களைக்கட்டி விட்டார்கள் என்று சொல்லலாம். ஆகையால் 1942-ம் வருஷத்தில் 9-மிலியன் டன்கள் எடைமானமுள்ள கப்பல்கள் நமக்கு நஷ்டமாகிவிட்டன. அதாவது சராசரி ஒரு மாதத்திற்கு 7,50,000 டன்கள் நஷ்டம்.

1943-ம் வருஷம் மேமீ 3-ம் தேதியன்று பெர்லின் ஒலிபரப்பு நிலயத்திலிருந்து ஏப்ரல் மாதத்தில் 4,23,000 டன்கள் எடைமானமுள்ள கப்பல்களை மூழ்கடித்துவிட்டதாகச் சொல்லப்பட்டது. 1941-ம் வருஷம் டிஸம்பர் மாதத்திற்குப்பின் ஏற்பட்ட நஷ்டங்களைவிட இது ரொம்பவும் குறைவானது. 1943-ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் ஏற்பட்ட நஷ்டங்களின் பாதிக்குக்கூட குறைவானது.

இந்த நஷ்டக் கணக்கை ஜெர்மனி சாதாரணமாகச் சொல்லும் காலம் தப்பி ஒரு மணி கழித்து வெளியிட்டது. ஹிட்லரின் தலைமை காரியாலத்திலிருந்து வெளிவரும் பிரசுரங்களை வெளியிட்டபொழுது இதை அதில் சேர்த்துச் சொல்லவில்லை. வழக்கம்போல் கூச்சலிடுவது நின்றுவிட்டது.

## நஷ்ட சுடுப்பேச்சு.

நீர்மூழ்கிகளின் அட்டகாசத்தைப்பற்றி சமீபகாலத்தில் செய்து வந்த பிரசாரங்களெல்லாம் குறைவான கப்பல் நஷ்டக்கணக்கை விரிவாகப் பிரசுரம் செய்தால் வீணாய்ப்போய் விடுமோவென்று கோயபல்ஸ் மறந்து விட்டான் போலிருக்கிறது. வஸந்தகாலம் வரட்டும். மாரிகாலக்காற்றுகள் ஓய்ந்து விடட்டும் என்றும் பிரசுரம் செய்து வந்தான். பெர்லின் ஒலிபரப்பில் இதைப்பற்றித்தான் பேசுகிறது. வஸந்தகாலம் வந்து விட்டது. மாரிகாலக் காற்றுகளும் நின்று விட்டன. அதேவிதமாக கப்பல் நஷ்டங்ளும் குறைந்துவிட்டன.

பயமுறுத்தலும், வாக்குறுதியும் செய்யக்கூடிய இந்த பிரசாரமுறைகளோடு, நேசநாடுகளின் அறிக்கைகளை மறைப்பதற்காக, கப்பல் நஷ்டங்களுக்கு மேலாகவே நேசநாட்டார்கள் கப்பல்களைக்கட்டி முடித்து விடுகிறார்களென்று கோயபல்ஸ் பிரசங்கம் செய்து வருகிறான். சென்ற வேனிர் காலத்தில் எதிர்ப்பு யுத்தம் ஆரம்பிக்கப்பட்டது. கப்பல் நஷ்டங்களைவிட உற்பத்தி அதிகரித்துவிட்டது. 1942-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதத்தில் அமெரிக்கக் கப்பல் கட்டும் தொழிற்சாலைகள் 1 மிலியன்களுக்கு மேலான டன்கள் எடைமானமுள்ள கப்பல்களைக் கட்டி விட்டார்கள். ஸெப்டம்பர் மாதத்தில் 1 மிலியன் குரோஸ் டன்கள் எடைமானமுள்ள கப்பல்களை மூழ்கடித்துவிட்டதாக கோயபல்ஸ் பிரசாரம் செய்து வந்தான். (1 மிலியன் டெட்வெட் டன்களென்பது 7,00,000 குரோஸ் டன்களுக்கு சமானமானது).

ஜெர்மானியர்கள் எப்பொழுதும் மிகையாகத்தான் கணக்குகளைச்சொல்லுவது வழக்கம். நேசநாடுகளின் கப்பல் உற்பத்தியைக்கண்டு கோயபல்ஸ் அதிகமாகப் புளுக ஆரம்பித்து விட்டான். மார்ச்சு மாதம் 3-ம் தேதியன்று பிரிடிஷ் கடற்படையின் முதல் பிரபுவான மிஸ்டர் A. V. அலெக்ஸாண்டர் பின்கண்ட அறிக்கையை வெளியிட்டார். "சென்ற வருஷம் டிஸம்பர் மாதத்திலிருந்து இவ்வருஷம் பிப்ரவரி மாதம் முடிய சென்ற மாரிகாலத்திலிருந்ததைவிட நமக்கு ஏற்பட்டிருக்கும் கப்பல் நஷ்டங்கள் மிகவும் குறைவானவை." ஆகிலும் 1941—42-ம் வருஷத்திலிருந்ததைவிட இவ்வருஷத்தில் நமக்கு 40-சதவிதம் அதிக நஷ்டமேற்பட்டதென்று ஜெர்மானியர்கள் புளுகுகிறார்கள்.

## மிகையான நஷ்டக்கணக்கைவிட உற்பத்தி அதிகரித்துவிட்டது.

ஏப்ரல் மாதம் 29-ம் தேதியன்று பெர்லின் ஒலிபரப்பில் ஒருவர் பிரசங்கம் செய்தார். "புள்ளி விபரங்களில் டெட்வெயிட் டன்களென்றும் குரோஸ் டன்களென்றும் பரி பாஷைகளை உபயோகப்படுத்தி பேத்து மாத்தல் செய்தபோதிலும், உற்பத்தியைவிட அதிகமான எடைமானமுள்ள கப்பல்கள் பிரிடனுக்கும், அமெரிக்காவுக்கும் நஷ்டமாகி வருகின்றன என்பதில் சந்தேகமில்லை." இந்த அறிக்கைக்கு ஆதாரமாகப் புள்ளி விபரங்கள் கொடுக்கப்படவில்லை. ஆகிலும் நேசதேசத்தார்கள் ஒரு மாதத்துக்கு 12,50,000 டன்கள் எடைமானமுள்ள சாமான் கப்பல்களைக்கட்டி வருகிறார்களென்பதில் சந்தேகமேயில்லை. ஜெர்மனி ஒரு மாதத்தில மூழ்கடித்ததாகச் சொல்லும் கப்பல்களைவிட இந்த உற்பத்தி அதிகம்தான். 1939-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதத்திலிருந்து 1943-ம் வருஷம் மார்ச்சு மாதம் முடிய சராசரி ஒரு மாதத்தில் 601, 405 குரோஸ் டன்கள் எடைமானமுள்ள கப்பல்களை ஜெர்மனி மூழ்கடித்துவிட்டதாம். 1942-ம் வருஷம் ஏப்ரல் மாதம் ஆரம்பத்திலிருந்து 1943-ம் வருஷம் மார்ச்சு மாதம் முடிய சராசரி ஒரு மாதத்தில் 7,88,073 குரோஸ் டன்கள் எடைமானமுள்ள கப்பல்கள் நஷ்டமாகியிருக்கின்றன. 1942-ம் வருஷம் நவம்பர் மாதத்தில்தான் ஜெர்மானியர்கள் 10,35,700 குரோஸ் டன்கள் எடைமானமுள்ள கப்பல்களை மூழ்கடித்துவிட்டதாக அதிகமான கணக்குகள் வெளியிட்டார்கள்.

இந்த வருஷம் வஸந்த காலத்தில் பலமான தாக்குதல்கள் செய்வதற்கு ஜெர்மனிக்கு சில கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கவேண்டும். சென்ற சில வாரங்களில் அதிக யூ படகுகளின் நஷ்டத்தினால் இந்தச் சிரமங்கள் ஏற்பட்டிருக்கலாம். ஆகிலும் அவைகள் தாத்காலிகமானவை. திடீரென்று முடிவான அபிப்பிராயத்தை இப்பொழுது வெளியிட முடியாது. ஆகிலும் வடக்கு அட்லாண்டிக் மார்க்கங்களில் செல்லும் துணைக்காவல் கப்பல்களுக்கு இதுவரையில்லாதபடி பலமான கவசம்பூண்ட கப்பல்களும், மார்க்கம் பூராவிலும் விமானப்படை பாதுகாப்பும் ஏற்பாடாகிவிட்டன.

## குறைவு சரி செய்யப்பட்டது.

ஜெர்மானியர்களுக்கு வெற்றிகள் ஏற்படுவதற்குச் சாதகமான முறையான கூட்டமாகச் சென்று தாக்குவது என்ற திட்டப்படி யூ படகுகள் சமுத்திரமட்டத்திலேயே நடமாட வேண்டும். இது இருட்டிலாவது அல்லது பகல் காலத்தில் நேசதேச விமானங்களில்லாதபொழுதாவதுதான் நடைபெறக்கூடும். வேனிர்கால மத்தியில் வடக்கு அர்த்த கோளத்தில் பகல் காலம் அதிகரித்துவிடும். யூ படகுகளின் அட்டகாசத்துக்கு அவகாசம் குறைந்துவிடும். அட்லாண்டிக்கின் மத்திய பாகத்தில் 600 மைல்கள் கொண்ட ஒரு பிரதேசத்தை பிரிடிஷ் அமெரிக்கக் கப்பல்களுக்கு புதைகுழி ஸ்தலமென்று ஜெர்மானியர்கள் அடிக்கடி சொல்லுவதுண்டு. கடற்கரையிலுள்ள விமானங்கள் இந்தப் பிரதேசத்துக்குச் செல்ல முடியாதது காரணமாக இந்த அறிக்கை வெளிவந்திருக்கலாம். ஆனாலும் கனேடிய அரசாங்கத்தார் போட்டிருக்கும் திட்டத்தின் மூலம் இந்தக் குறைபாடும் நீங்கிவிட்டது.

# யூக்ரேனில் ஜெர்மனிக்குத் தோல்வி.

யூக்ரேனிலுள்ள கோதுமை பிரதேசத்தை அபலாபப்படுத்திக்கொள்வதென்பது தான் ஜெர்மன் தலைவர்களின் முக்கியமான தோற்றம். கியேவ் என்ற தனிப்பட்ட மாகாணமிருக்க வேண்டுமென்று பிஸ்மார்க் கனவு கண்டான். கெயிஸர் வில்ஹெல்ம் II என்பவர் ஒரு மாகாணத்தை அமைத்தார். அது சொல்பகாலத்துக்குள்ளாக வீழ்ந்துவிட்டது. பிரயத்தனம் வீணாகிவிட்டது. இப்பொழுது ஹிட்லர் யூக்ரேனில் ஒரு குடியேற்ற நாட்டை ஏற்பாடு செய்து ஐரோப்பிய ஜெர்மனிக்கு அதை தானியக்களஞ்சியமாக உபயோகப்படுத்தவேண்டியதென்று பகிரதப்பிரயத்தனம் செய்துவருகிறான்.

சென்ற யுத்தத்தில் யூக்ரேன் ஐச்வர்யத்தை அபகரிக்க ஜெர்மன் சாம்ராஜ்யம் செய்த பிரயத்தினம் வீணாகிற்றென்பது சரித்திர பூர்வமான ஸித்தாந்தம். 1918-ம் வருஷம் லூடண்டார்ப் பின்வருமாறு எழுதினான். "நான் கிழக்குப் பக்கம் சென்றதற்குக் காரணம் ராணுவ நிலைமையின் அவசரத்தை உத்தேசித்துத் தான். நான் உயிர்தப்பச் செய்துவரும் யுத்தத்தில் அந்நிய தேசங்களைக் கைப்பற்றுவது என்ற யோசனைக்கே இடமில்லை. காகஸஸைப் பிடித்துவிடுகிறதென்ற யோசனையே போய்விட்டது. நாம் நிலையாகநின்று சண்டை போடுவதற்கு வேண்டிய ஐச்வர்யங்களை மட்டும் தான் நாம் கைப்பற்ற முயலவேண்டும்." அதே மாதிரி ஹிட்லரும் எதிர் பார்த்தபடி லாபங்களை அடையவில்லை. அவன் இப்பொழுது கைப்பற்றியிருக்கும் ஐச்வர்யங்களெல்லாம் யூக்ரேனைப் பாதுகாக்கப்போதுமானவை தான்.

### குறைவான விளைவுகள்.

1941-ம் வருஷத்தில் யூக்ரேன் பிரதேசத்திலிருந்து ஹிட்லருக்கு 5,00,000 டன்கள் எடைமானமுள்ள உணவுப் பொருள்கள் கிடைத்திருக்கலாம். ஆகிலும் ஜெர்மனியின் தேவைக்கு இது அல்பமான பாகம் தான். பிரிடிஷ் பொருளாதார நிபுணர்கள் போட்டிருக்கும் கணக்குப்படி 1941-ம் வருஷம் யூக்ரேனில் உண்டாகிய உணவுப் பொருள்களின் உற்பத்தி பின்வருமாறு. 2,00,000 டன்கள் எடைமானமுள்ள ரொட்டி, 4,50,000 டன்கள் எடைமானமுள்ள உருளைக்கிழங்கு, 40,000 டன்கள் எடைமானமுள்ள சர்க்கரைவள்ளிக் கிழங்கு 1,20,000 டன்கள் எடைமானமுள்ள கசாய், 1,50,000 டன்கள் எடைமானமுள்ள கொழுப்பு.

உள்நாட்டிலுள்ள ஜனங்களுக்குக் குறைவாகப் பங்கிட்டுக் கொடுத்திருந்தாலும் ஜெர்மானியர்களுக்கு மூன்றில் ஒரு பங்கும் அல்லது பாதி பாகம் உணவுப் பொருள்களும் தான் கிடைத்திருக்கும். யூக்ரேனில் வைக்கப்பட்டிருக்கும் ஜெர்மன் படைகளின் தேவைகளுக்குப் பங்கிட்டது போக ஜெர்மனிக்குக் கொண்டுபோவதற்கு ஒன்றும் பாக்கியிருக்காது. அதே ரிபோர்ட்டில் 1942-ம் வருஷத்தில் யூக்ரேனில் உணவு உற்பத்தியானது 40 சதவிதம் குறைந்துவிட்டதென்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் கணக்கை 1937-ம் வருஷத்தில் ருஷ்யர்கள் வெளியிட்டிருக்கும் கணக்குகளுடன் ஒப்பிட்டுப்பாருங்கள். அந்த வருஷத்தில் யூக்ரேனில் 10 மிலியன் டன்கள் எடைமானமுள்ள கோதுமை விளைந்தது. அதில் யூக்ரேனிலுள்ள 31 மிலியன் ஜனங்களுக்கு 7 மிலியன் டன்கள் எடைமானமுள்ள உணவுப்பொருள்கள் உபயோகப்பட்டது.

### அபலாபமடைவதில் சிரமங்கள்.

இன்று யூக்ரேனில் அதிக லாபம் சம்பாதித்துவிடுவதென்பது 1917—18-ம் வருஷங்களைவிட ரொம்பவும் சிரமமானது. ருஷ்யாவின் பொருளாதார திட்டத்தின் சிக்கல்கள் தான் இதற்குக் காரணம். இந்த திட்டப்படி ஒன்றுபட்ட யந்திரங்கள் வேலை செய்யும். நன்றாய் அமைக்கப்பட்ட பொருளாதார அமைப்பு ஏற்பாடாகியிருக்கிறது. ஆகையால் ருஷ்யர்கள் செய்த நாசவேலையின் மூலம் பொருளாதார நிலைசீர் கெட்டுவிட்டது. அவசியமான யந்திரங்களையும் வேலைக்காரர்களையும் அப்புறப்படுத்தியதிலிருந்தும் நீப்ரோஸ்ட்ராய் அணை முதலியது போன்ற முக்கியமான பிரதேசங்களை நாசம் செய்ததிலிருந்தும் யூக்ரேனின் ஐச்வர்யங்களை உபயோகப்படுத்தக் கூடிய வசதிகளை நாஸிகள் இழந்துவிட்டார்கள். இவ்விதமாக 67,000 சாகுபடி வண்டிகள், 1,85,000 கனமான வண்டிகள், 22,000 இதர சாதனங்கள் எல்லாவற்றையும் ருஷ்யர்கள் நாசம் செய்துவிட்டார்கள். சாகுபடி வண்டிகள் ஓட்டும 1,58,500 டிரைவர்களும் 18,500 வண்டி டிரைவர்களும், 15,000 யந்திர வேலைக்காரர்களும் யூரல்மலைகளுக்குப் போய்விட்டார்கள். மேலும் நிலக்கரி, முதலியவைகளற்றுப் போய்விடும்படியாகவும் ருஷ்யர்கள் செய்துவிட்டார்கள்.

### பேச்சு மாற்றல்.

1942-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 26-ம் தேதி பிராங்க்பர்ட் ஸீடங் என்னும் பத்திரிகையில் வெளியிடப்பட்ட ரெக்ஸ் நார்ஸ்டாண்டு என்னும் வியவசாயிகளின் சங்கத்தாரின் அறிக்கையின் மூலம், 1943-ம் அறுவடைக்கு முன்னால் யூக்ரேனிலிருந்து அதிகமான உணவுப் பொருள்கள் கிடைத்துவிடுமென்று ஜெர்மானியர்கள் எதிர்பார்க்கக் கூடாதென்று எச்சரிக்கப்பட்டார்கள்.

சென்ற வருஷம் வேனிர் காலத்தில் ஜெர்மன் சேனை முன்னேறித் தாக்கிய பொழுது, தேசங்களின் லாபத்திலிருந்து ஜெர்மனிக்கு ஏற்படப்போகும் லாபங்களைப்பற்றி ஜெர்மானியர்கள் குதூஹலத்துடன் பிரசாரம் செய்ய ஆரம்பித்தார்கள். மே மாதத்தில் யூக்ரேனிலுள்ள நிலங்களில் சாகுபடி செய்தாகிவிட்டதென்று ஜெர்மானியர்கள் சொல்லிவந்தார்கள். ஜூலை மாதம் 22-ம் தேதியன்று பெர்லினிலிருந்து ஒலிபரப்பில் பின்கண்ட விஷயம் ஒலிபரப்பப்பட்டது. "யூக்ரேன் பூராவும் ஜெர்மானியர் வசமாகிவிட்டது. தெற்கு ருஷ்யாவிலுள்ள எண்ணெய்ப் பிரதேசங்களும் மற்ற இயற்கைப் பொருள்களும் சுலபமாக நமக்குக் கிட்டிவிடும். யுத்தத்தில் 10-ல் 9 பங்கு நாம் வெற்றி பெற்றுவிட்டோம். பொருளாதார முறையில் யுத்தம் நமக்கு வெற்றிகரமாக முடிந்துவிட்டது". பிறகு ருஷ்யாவின் எதிர்ப்பு வலுத்துவிட்டது. பிரசாரகர்களின் தொனி குறைய ஆரம்பித்தது. ஜூலை மாத முடிவில் டாக்டர் ரோஸன்பர்க் என்பவர் ருஷ்யாவில் சாகுபடி செய்யப்பட்ட பிரதேசம் 85 சதவிகிதம் தானென்று மதிப்புப் போட்டார். அதற்குப் பின் பெர்லின் ஒலிபரப்பில் யூக்ரேனில் 75 சதவிகித நிலங்கள் தான் சாகுபடி செய்யப்பட்டதென்றும் சொல்லப்பட்டது. இலையுதிர் காலம் துவங்கிய பொழுது ஜெர்மனியும் இதாலியும் ஆக்கிரமிப்பு ருஷ்யாவிலுள்ள வியவசாயப்பொருள்கள் ஜெர்மன் சேனைகளுக்குத்தான் போதுமானதென்று சொல்ல ஆரம்பித்தார்கள். ஆகையால் யூக்ரேன் பிரதேசத்தின் விளைவுகள் ஜெர்மனியின் க்ஷேமத்துக்கு மறைமுகமாகத்தான் உபயோகப்படுமென்றும் சொல்லப்பட்டது. குறைவான விளைவுகளுக்குப் பல காரணங்கள் சொல்லப்பட்டன. மூடுபனி, போக்குவரத்து சிரமங்கள், பின்வாங்கும் ருஷ்யர்கள் முட்டாள்தனமாகச் செய்த நாசவேலைகள், கடைசியாக போல்ஷிவிஸ்டு திட்டமும அடுக்கிடப்பட்டன. போல்ஷிவிஸ்டு திட்டப்படி தனிப்பட்ட முறையில் குடியானவர்கள் தங்கள் நிலங்களைச் சாகுபடி செய்வதென்ற முறையானது தடைபட்டுவிட்டதென்றும் புகார் செய்யப்பட்டது.

### உத்சாகப் பேச்சு.

1942-ம் வருஷம் மாரிகாலத்தில் வேறு முறையில் பிரசாரம் செய்யப்பட்டது. யூக்ரேன் நிர்வாகத்தில் தலைவரான கோக் என்பவர், சென்ற வசந்த காலத்தில் தன் ஆக்ஷிக்குட்பட்ட சாகுபடிக்கு லாயக்கான பிரதேசங்களில் 90 சதவிகிதம் பயிரிடப்பட்டிருக்கிறதென்று வெளியிட்டார். வேனிர் காலத்தில் டாக்ட்ர் ரோஸன்பர்க் சொன்னதற்கும் இதற்கும் முரணுகயிருக்கிறது. ஸ்வீடிஷ் பத்திரிகையான ஸோஷன் டெமொக்ராடன் சொல்லுகிறபடி, விவசாய சாதனங்களின் குறைவும், நிலக்கரியின்மையும், ஜெர்மனிக்கு 5,00,000 தொழிலாளர்களை யூக்ரேனிலிருந்து அப்புறப்படுத்தியதும் சேர்ந்து கவனித்தால். இது நம்பத்தக்கதில்லை. ஜெர்மன் பிரசாரமுறையில் இம்மாதிரியான கல்பனையான பேச்சானது ஜெர்மனியில் நான்காவது மாரிகால யுத்த உதவி நிதிக்கு வேண்டுகோள் செய்யும் சமயத்தில் கிளம்பியதால் இதன் பிரயோஜனம் தெளிவாகத் தெரியவருகிறது. ஜெர்மனிக்கு ஏராளமான ஸப்ளைகள் வந்துகொண்டிருக்கின்றனவென்றும் ஸுபிக்ஷமான காலம் வந்துவிட்டதென்றும் ஜெர்மானியர்கள் நம்பவேண்டுமென்பதற்காகத் தான் இந்தப் புதிய பிரசாரம் செய்யப்பட்டது.

யூக்ரேனிலிருந்து அதிக லாபம் சம்பாதித்து விடுவதென்பது கனவுதான். ஜெர்மனியின் பிரசாரங்களில் தடுமாட்டமிருப்பதிலிருந்தே ஜெர்மனியின் பிரயத்தனம் பலிக்கவில்லை என்று அவர்கள் ஒப்புக்கொள்ளுகிருர்கள்.

---

## இதாலியக் கப்பற்படை ஒளியிலிருந்து வெளிவருமா?

---

இதாலியக் கப்பற்படையில் இதாலி சண்டையில் ஈடுபட்ட நாள்முதல் 10 க்ரூயிஸர் கப்பல்களையும் 48 டார்பிடோ படகுகளையும், நாசகாரிகளையும் ஸப்மரீன்களைத்தவிர 35 சிறிய கப்பல்களையும், பல ஸப்மரீன்களையும் இழந்திருந்தாலும், யுத்தத்தில் இன்னும் இதாலிய கப்பற்படை ஒரு முக்கியமான பலம் பொருந்தியதும், நிலையானதுமானதாய் இருக்கிறது

என்று டைம்ஸ் பத்திரிகை கூறுகிறது. 1940-ம் ௵ ஜூன் மாதம் சண்டையில் ஈடு பட்டிருந்த கப்பல்களில் 1940-ம் ௵ நவம்பர் மாதம் 11-ம்வ டாரண்டோ என்ற இடத்தில் கடல் விமானங்களால் தாக்கப்பட்டு பழுதடைந்த "லிட்டோரியா" "காவூர்" என்ற இரண்டு கப்பல்கள் சேதத்துடன் கரை சேர்க்கப்பட்டன. லிட்டோரியா என்ற மிகவும் பலம் பொருந்திய அந்தக் கப்பல், சீக்கிரத்தில் பழுது பார்க்கப்பட்டு உடனே கடலில் விடப்பட்டு சண்டையில் கலந்துகொண்டது. சண்டைக்கு சற்று முன்பு திருத்தியமைக்கப் பட்ட பழைய கப்பலான "காவூரையும்" பழுது பார்த்து அதுவும் இப்பொழுது தயாராயி ருக்கிறது. லிட்டோரியாவின் இரண்டு சகோதரிக் கப்பல்கள் 'ரோமா' 'இம்பெரோ' என்ற இரண்டும் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றன என்று அச்சு நாட்டினர் அறிவிக்கின்றனர். இதற்குள் இரண்டு கப்பல்கள் கட்டப்படுவது சாத்தியமில்லையானாலும் முடியாத காரியம் இல்லை.

ஏற்கனவே இருந்த பத்தொன்பது க்ரூயிஸர் கப்பல்களில் ஒன்பது மீதமாயிருக்கின் றன. அவைகளில் இரண்டு 10,000 டன் நிறையுள்ளதாயும், எட்டங்குல பீரங்கிகள் கொண்டதாயுமிருக்கின்றன.

இதாலி யுத்தத்தில் ஈடுபட ஆரம்பித்ததில் 104 நவீன சாதனங்களோடு கூடிய நாசகாரிகளும், டார்பிடோ படகுகளும் இருந்தன. அவைகளில் மூழ்கிய 48 நாசகாரிகளையும், டார்பிடோ படகுகளையும் இப்புது கப்பல்களிலிருந்து குறைப்பதற்கில்லை. அவைகளில் சில சென்ற யுத்தத்தில் போரிட்டவைகள். இப்போதும் யுத்தத்தில் சில அலுவல்களுக்கு பயன் படலாம். சில கப்பற் படையில் சென்ற 3 வருஷங்களில் சேர்க்கப்பட்டிருக்கலாம். ஆகவே இதாலிய தளகர்த்தரான அட்மிரல் ரிக்கார்டியிடம் இப்பொழுது சுமாராக 6 அல்லது 8 சண்டைக் கப்பல்களும், 2 கனமானதும், 7 லேசானதுமான க்ரூயிஸர் கப்பல்களும், 60 நாசகாரிகளும் டார்பிடோ படகுகளும் கொண்ட ஒரு கப்பற்படை இருக்கலாம்.

'ஜெர்மன் கப்பற்படையில் புது தளகர்த்தரான அட்மிரல் டோனிட்சு, ரோமில் அட்மிரல் ரிகார்டியுடன் மார்ச்சு மாதத்தில் 3 நாட்கள் கூடிப் பேசினர். அவர் மார்ச்சு மாதத்தில் 3-ம்வ ஒலிபரப்பு மூலமாய் பேசுகையில் நேசதேச கடல் மார்க்கங்களை மிகவும் சுலபமாய்த் தாக்கிவிடலாமென்றும், அம்மார்க்கங்களைத்தான் அச்சு நாட்டினர்கள் முழு பலத்தோடும் தாக்கவேண்டுமென்றும் அவர் கூறினார். இந்தச் சந்திப்பும் சந்தேகமன்னியில் விசேஷமானதும், உபயோகமுள்ளதுமாய் இருக்கிறது. தானே தோன்றக்கூடிய நிச்சய மான முடிவு என்னவென்றால், அச்சு நாட்டினருக்கும் மத்திய தரைக் கடலில் ஏற்பட்டிருக்கும் கஷ்டத்தை நிவர்த்திக்க, மற்றொரு பக்கத்தில் தாக்குதல் செய்ய அச்சு நாடுகள் ஏற்பாடு செய்கின்றன என்பதேயாகும். கடற்படை என்று சொல்லக்கூடிய பலத்தை இழந்துவிட்ட இதாலியக் கடற்படையை உபயோகிப்பதாக ஜெர்மன் உத்தேசித்திருக்கிறது. கடற்படை என்ற பெயர் விளங்கவேண்டுமானால் இதாலியப்படை இப்பொழுது யுத்தத்தில் கலந்து கொள்ளவேண்டும். மத்தியதரைக்கடலில் நேசதேசக்கடற்படைத் தலைவர் சர் ஆன்டுரு கண்ணிங்காம் மத்தியதரைக்கடலில் ஏற்பட்டுள்ள நேசதேச விமான உயர்ச்சியினாலும், அதாவது முந்தி சேனாதிபதியாயிருந்த நாட்களில் அவருடைய கப்பற் கூட்டம், வெற்றியாய்த் திரும்பினாலும்கூட அப்பொழுது அடைந்த கஷ்டங்களை இப்பொழுது நிவர்த்தி செய்து கொள்ள வசதியிருப்பதாலும், இதாலியப் படைகள் சண்டை செய்து பரீக்ஷை பார்க்க வேண்டும் என்ற ஒரு சந்தர்ப்பத்தை சந்தேகமன்னியில் எதிர் பார்க்கிறார். அந்த சந்தர்ப் பத்திற்கு அவர் வெகு நாட்கள் காக்க வேண்டிய அவசியமே இல்லை. ஹிட்லராவது, ரோமலாவது கொஞ்சங்கூட தாமதிக்காமல் இதாலியக் கடற்படையை சண்டைக்கு அனுப்பி எல்லாவற்றையும் சமுத்திரத்திற்குள் மூழ்கடித்துவிடுவார்கள். இந்தத் தியாகத்தின் மூலம் சில ஜெர்மானியத் துருப்புகளை வாபஸ் பெற்று அவர்களை மீட்க வசதி ஏற்பட்டால்தான் ஹிட்லர் அவ்விதம் செய்வான்.

---

## புனிதமான தேசம்.

(ஜெனரல் மாக் ஆர்தர், மே 6-ம்தேதி).

ஒரு வருஷத்துக்கு முன்னால் காரிஜிடார் சரணடைந்தது. இந்தப் பிரதேசம் யுத் தத்தினால் பாழடைந்து சூன்யமாயிருக்கிறது. ஆகிலும், மற்ற அநேக ஸ்தலங்கள்போல மனிதர்களின் அழிவினாலும், கஷ்டங்களினாலும் புண்ய பூமியாகிவிட்டது. ஆகிலும் தேச மக்களின் உயர்வான, அழிவற்ற செல்வமான கௌரவத்தை அது ஞாபகப்படுத்துகிறது.

இவ்விடத்தில் கீழே தள்ளப்பட்டுக்கிடக்கும் கொடியைத் தூக்கி ஸ்தாபிக்காதபோனல் மனித சமூகத்தை நாம் காப்பாற்றியவர்களாக ஆகமாட்டோம். அங்கே சோர்வடைந்து மெலிந்துபோய் வசித்துவரும் நமது ஜனங்களை நாம் மீட்காத போனல் நாம் ஈஸ்வரனுக்கு முன்னால் பிரார்த்தனை செய்துகொள்ளுகிறவர்களாக மட்டும் ஆகிவிடுவோம். நாம் மீட்க வேண்டிய் புனிதமான பூமி அங்கிருக்கிறது.

---

## சைனு எதிர்க்கிறது---பலப்படுத்திக்கொள்ளுகிறது.

**டார் H. D. லிம்.**

"யுத்தத்தின் முதல் சில மாதங்களில் நம்முடைய தீரமான எதிர்ப்பை வெல்லமுடியாமல் ஜப்பானியர்கள், நம் பொது ஜனங்களை எதிர்பாராதவிதமாய் மிருகத்தன்மையாகவும், கொடுமையாகவும், துஷ்டத்தனமாகவும் நடத்த ஆரம்பித்தனர். திடுக்கிட்டு சைனு மக்கள் இந்த யுத்தம் பூர்ணமான யுத்தம் என்றும், இந்த பூர்ண யுத்தத்தை பூராவும் எதிர்த்தே தீரவேண்டும் எனறும் உணர்ந்தார்கள். அரசாங்கம் சமயத்திற்குத் தகுந்தபடி ஜனங்களையும் உத்சாகப்படுத்தியது. சைனுவின் யுத்த, சமாதான கொளகைகளைப்பற்றி தெளிவாகவும், நேரான முறையிலும், புரியும்படியாயும் ஜனங்கள் அறியும் படியாயும் சைனு அரசாங்கம் வெளியிட்டது.

"யுத்த சமாதானத்தின், முதல் கொள்கை எத்தனை கஷ்டம் ஏற்பட்டாலும் தேசீய ஒற்றுமையையும், யுத்தத்தை எதிர்த்து வெற்றிபெறும்வரை சண்டையிடுவதும்தான். இரண்டாவது தேசத்தை திரும்பவும் பலப்படுத்துவது. அதாவது, ஒருபுறம் சண்டையும், மற்றொரு புறம் தேசத்தை சீர்திருத்துவதுமேயாகும். அதனுல் யுத்தம் முடிந்து வெற்றியடைந்த பிறகு முற்றிலும் சோர்ந்துபோய்விடாமல், 1937-ம் வருஷத்தில் யுத்தத்தில் இறங்கியபோது இருந்ததைவிட பலத்தோடும், மகிமையோடும் சைனு இருக்கும்படி ஏற்பாடு செய்வது. இந்தப் பெரிய சீர்திருத்த ஏற்பாட்டின்படி, சைனுவை, ஜப்பானைப்போல் சில குடும்பங்களுக்குமட்டும் சொந்தமாக்காமலும், ஜப்பானில் 3 குடும்பங்கள் நாட்டை ஆளுவதுபோல் இல்லாமலும், சைனு தேசத்திலுள்ள 4,500 லக்ஷம் சீன மக்களுக்கு சொந்தமாக்குவதற்கேயாகும்.

### பொதுஜன அரசியல் சபை.

"3-வது கொள்கை சைனுவில் ஜனநாயக ஆட்சி ஏற்படுத்துவது. சைனுவில் ஏற்படப் போகும் ஜனநாயக ஆக்ஷியானது உண்மையானதாயும், நல்ல பொருளாதார முறையையும், ராஜீய முறையும் தழுவியிருக்கவேண்டும்.

"யுத்தத்திற்கு முன்பு சைனுவில் பார்லிமெண்டு கிடையாது. யுத்தம் ஆரம்பித்தது முதல் பொதுஜன அரசியல் சபையை ஏற்படுத்திக்கொண்டோம். இந்த சபை ஆலோசனை கூறும் சபையாயிருந்தாலும் அதன் தீர்மானங்களையும், சிபார்சுகளையும் சைனு அரசாங்கம் இதுவரையில் தள்ளவேயில்லை. உண்மையில் ஜெனரலிஸிமோ சியாங்கேஷேக், இந்த சபையையே சைனுவில் ஏற்படப்போகும் பார்லிமெண்டிற்கு ஒரு கருவியாகக் கருதுகிறார். இதிலிருந்து சைனு ஒரு ஜனநாயக ஆக்ஷி நாடாக மாறி, உலகத்தின் ஸ்வதந்திரத்தையே காப்பாற்ற ஒரு சக்தியுள்ள நாடாகமாறும். இதுவே நமது யுத்தத்தின் மூன்ருவது குறிக்கோளாகும்.

"இன்றைய சைனுவின் உணர்ச்சியானது, ஜப்பானியர் விரும்புவதற்கு நேர்மாருனதையே விரும்புகிறது. கீழ்நாட்டிலுள்ள மக்கள் மேல் நாட்டுமக்களை வெறுத்து அவர்களைவிட்டு விலகிக் கொள்ளவேண்டும் என ஜப்பான் விரும்புகிறது. ஆனல் சைனுவில் இருக்கும் நாமோ மேல் நாட்டு ஸ்வதந்திர மக்களும் கீழ்நாட்டு ஸ்வதந்திர மக்களும், சமத்துவம், நியாயம் மரியாதை இவைகளை அடிப்படையாகக்கொண்டு நெருங்கிய உறவோடு இருக்கவேண்டுமென்று விரும்புகிருேம். அப்படியிருந்தால்தான் உலகிலே சகோதரத்துவமும், நிலையான சமாதான வாழ்கையும் ஏற்படும்.

"இந்த யுத்த சமாதான கொள்கைகளுக்காகவே சைனு—இந்த மகத்தான தியாகங்களை செய்கிறது. சைனு ஸ்வதந்திர நாடாக நிலைத்திருப்பதற்கும், யுத்தத்திற்கு பிறகு பலமாகவும், க்ஷேமமாகவும், சைனு விளங்குவதற்கும், நேசநாடுகள் வெற்றிபெறுவதற்கும், காட்டுமிராண்டிகளான அச்சுப்படையினர் தோற்று, நாகரீகம் ஓங்குவதற்கும், சைனு மக்கள் தங்கள் உயிர்

களையும், வீடுவாசல்களையும், தங்களிடமுள்ள எல்லாவற்றையும் மனப்பூர்வமாய் தியாகம் செய்திருக்கிறார்கள்''.

### சைனா சம்பவம்.

ஆனால் நம் எதிர்ப்பின் கஷ்ட நஷ்டங்கள் மிகவும் அதிகமாக இருந்துகொண்டே இருக்கிறது. 2,000 லக்ஷம் சைனா மக்களின் உயிர்கள் ஜப்பானியரின் அக்கிரமமான சண்டையிலிருந்து பாதிக்கப்படுகின்றனர். அப்படியிருந்தும் அதனை ஜப்பானியர் "ஒரு சைனா சம்பவம்'' என்று கூறுகிறார்கள். சைனாக்காரர்களை அடித்து தங்கள் கால்களில் சரணடையச் சொல்வதாயும், சைனாவை உலகப்படத்திலின்றும் அழித்துவிடுவதாயும் ஜப்பானியர் பெருமை பாராட்டினர். இந்த நிபந்தனைக்காகவே, 4,000 வருஷ நாகரீகமும், கலையும் உடைய சைனா மக்கள் பழிக்குப்பழி வாங்கும் நோக்கத்தோடு எதிரிகளை எதிர்த்துப் போரிட முன்வந்திருக்கின்றனர்.

இன்றைக்கு நாம் தனியேயில்லாமல், பிரிடிஷ் சாம்ராஜ்ய மக்களும் நம் பக்கமிருந்து சண்டை போடுவதென்பதில் நாம் குதூஹலிக்கிறோம்.

---

# மதராஸ் மாகாணத்தின் மூன்றுவது பட்டாளம்.

---

## தென் இந்தியாவின் கியாதிபெற்ற பட்டாளத்தின் சரித்திரமும், யுத்தப் புகழும், கீர்த்தியும்.

1943-ம் வருஷம் மார்ச்சு மாதம் 13-ம் தேதியன்று திருச்சினாப்பள்ளி ஒலிபரப்பு நிலயத்தில் இந்திய ராணுவப் படையில் கியாதி பெற்ற மதராஸ் மாகாணத்தின் மூன்றுவது பட்டாளத்தின் சரித்திரத்தைப் பற்றியும், யுத்த வீரத்தைப் பற்றியும், புகழைப் பற்றியும் ஒலிபெருக்கினார்கள். இந்த மதராஸ் பட்டாளமும், விக்டோரியா மகாராணியின் ஸாப்பர்ஸ், மைனர்ஸ் பட்டாளமும், பயோனியர் படைகளும் சேர்ந்து இந்தியாவின் சரித்திரத்தில் தென் இந்தியத் துருப்புகளின் வீரத்தன்மையையும், தீரத்தையும் நிலைநாட்டியிருக்கின்றன. பழைய பட்டாளம் கலைக்கப்பட்டுவிட்டது. இந்த யுத்தத்திலும் சந்தர்ப்பம் வாய்த்துவிட்டதால் தென் இந்தியாவின் துருப்புகளின் ஊக்கமும், மனோதைரியமும் எவ்வித கஷ்டங்களையும் பொருட்படுத்தாமல் விடாமுயற்சியுடன் சண்டைபோடும் தன்மையும் வெளியாகிவிட்டன. கலைபட்ட பல வருஷங்களுக்குப் பின் மதராஸின் மூன்றுவது பட்டாளம் மறுபடியும் அமைக்கப்பட்டிருக்கிறது. பாரம்பரியமாக யுத்த சேவையில் ஈடுபட்ட ஜனங்களுக்குச் சேவை செய்ய மற்றொரு சந்தர்ப்பம் வாய்த்துவிட்டது. எதிரியிடமிருந்து தங்களுடைய தாய் நாட்டைப் பாதுகாப்பதற்கும் அவர்களுக்கு அவகாசம் கிடைத்துவிட்டது.

இந்த மதராஸ் பட்டாளத்தின் சரித்திரமானது இரண்டு நூற்றாண்டுகள் முதல்கொண்டு ஆரம்பிக்கிறது. முதல் முதலாக மதராஸ் சேனை தயாரித்ததென்பது 1746-ம் வருஷத்தில் தான். அப்பொழுது அந்தச் சேனைக்கு கடற்கரைப்படை என்ற பெயர் வழங்கப்பட்டது. முதல் முதலில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிப்பாய்கள் தங்களுடைய தலைவர்களுக்குட்பட்ட ஒரு சிறிய சேவகர்கள் படையாகயிருந்து வந்தார்கள். 1759-ம் வருஷம் ஜனவரி மாதத்தில்தான் இவைகளை ஒன்று சேர்த்து ஒரு பெரிய பட்டாளம் தயார் செய்யப்பட்டது. இதற்குள்ளாகவே மதராஸ் மாகாண சிப்பாய்கள் கிளைவ் பிரபுவின் கீழும், ஸ்ட்ரிஞ்சர் லாரன்ஸின் கீழும், ஆர்க்காட்டு யுத்தத்திலும், திருச்சினாப்பள்ளி யுத்தத்திலும் ஈடுபட்டுவிட்டார்கள். வங்காளத்தில் கிளைவுடன் நின்று போர்புரிந்து ப்ளாஸி யுத்தத்தில் வெற்றிபெற்றார்கள்.

### ஒழுங்கான பயிற்சி பெற்ற பட்டாளம்.

இந்தப் புதிய சேனையானது 1761-ம் வருஷம் நடந்த புதுச்சேரி முற்றுகையிலும், அதைக் கைப்பற்றியதிலும் தங்கள் பிரதாபத்தைக் காட்டியது. 1764 முதல் 1769-ம் வருஷம் வரையில் முகமதுயூஸப், ஹைதர் ஆலி இவர்களோடு நடந்த போர்களிலும் நமது சேனையின் திறமை சோபித்தது. 1780-ம் வருஷத்தில் 29 பட்டாளங்கள் தயாராகிவிட்டன. சேவகர்களின் கோஷ்டியாக இதுவரையிலிருந்த ஒரு பட்டாளமானது முதல்தரமான பயிற்சி பெற்று பிரிடிஷ் துருப்புகளுடன் கலந்துநின்று போராடக்கூடிய தன்மையை அடைந்து

விட்டது. அதற்கப்புறம் நடந்த யுத்தங்களிலும் இந்தப் படையானது, உணவுப் பஞ்சத்தினாலும், சம்பள பாக்கியினாலும் ஏற்பட்ட கஷ்டங்களையும் சகித்துக்கொண்டு தன்னுடைய கீர்த்தியை நிலைநாட்டியது. ஷோலிங்கூரில் இந்தச் சேனை செய்த சேவைக்காக இதற்கு விசேஷமான கௌரவ அடையாளம் அளிக்கப்பட்டது. 1799-ம் வருஷம் முதல் 1803-ம் வருஷம் வரையில் தெற்கு வெளிகளில் இந்தச் சேனை சண்டைசெய்து வந்தது. 1803—04-ம் வருஷங்களில் ஸர் ஆர்தர் வெல்லஸ்லி நடத்திய போர்களிலும் மதராஸ் படை பெரும் பங்கெடுத்துக் கொண்டு சரித்திரத்தில் புகழ்பெற்ற அஸ்ஸெ, ஆர்காம் என்னும் போர்களில் கியாதி பெற்றது. அஸ்ஸெயில் சண்டை செய்த பட்டாளத்துக்கு கௌரவ அடையாளம் கொடுக்கப்பட்டது. வெல்லஸ்லி தாராளமாக ஸ்தோத்திரமும் செய்தார்.

## ஏராளமான போர்கள், நடவடிக்கைகள்.

இதற்குப் பிறகு அநேக நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மதராஸ் சேனையானது முக்கியமான பங்கெடுத்துக்கொண்டு தன்னுடைய வீரத்தையும் வெளிக்காட்டியிருக்கிறது. இவைகளில் முக்கியமானவை, திருவாங்கூர் யுத்தம், வங்காளத்துச்கு விஜயம் (1757), மணிலா (1762), மாகி (1779), இலங்கை (1772, 1795), அம்பாயினா, ஸ்பைன் தீவு (1796), எகிப்து (1801—1802), போர்போன், மாரிஷஸ் (1810), ஜாவா (1811—12), மராத்தா யுத்தம் (1817—1818), ஆப்கன் யுத்தம் (1841—42), பர்மா யுத்தம் (1852), சீனருடன் இரண்டாவது யுத்தம் (1857—60), பெர்லியாவில் சேவை (1861), அபிஸீனியா (1867 1868), பேராக் (1875—76), பர்மாவிலும், லூஷெயிலும், சின் மலைகளிலும் சிறிய சண்டைகள் (1887—1892), வடமேற்கு எல்லைச் சரகயுத்தம், சீனாவில் யுத்தம் (1900), திபேத்துக்குப் பிரயாணம் (1903—1904). இதற்குள்ளாக படைபலமானது குறைவுபட்டுவிட்டது. 1914-ம் வருஷம் யுத்தம் ஆரம்பமானபொழுது மதராஸில் 8 காலாட் படை பட்டாளமும், ஸாப்பர்ஸ் மைனர்ஸ்களின் பட்டாளமொன்றும், பயோனியர் படைகளில் மூன்று பட்டாளங்களும் தானிருந்தன. ஸாப்பர்ஸ்களும், மைனர்ஸ்களும் தங்களுடைய புகழைப் பிரான்ஸிலும், எகிப்திலும் பாலஸ்தீனத்திலும், மெஸபொடோமியாவிலும், பாரஸீகத்திலும், கிழக்கு ஆபிரிக்காவிலும் நிலைநாட்டினார்கள். மற்ற துருப்புகளும் தீரமாகச் சண்டை செய்து மதராஸ் சிப்பாயின் கீர்த்தியைப் பரவச் செய்தார்கள். 1928-ம் வருஷத்தில் காலாட் படையில் பாக்கியிருந்த பட்டாளம் கலைக்கப்பட்டது. 1933-ம் வருஷத்தில் பயோனியர் படை கலைக்கப்பட்டது. இவ்விதமாக 174 வருஷங்களாகப் புகழ்பெற்று வந்த மதராஸ் பட்டாளம் தாத்காலிகமாக கலைக்கப்பட்டது.

## பயிற்சி சாலை.

பட்டாளம் மறுபடியும் சேமிக்கப்பட்டது. தென் இந்தியாவின் மத்திய பாகத்தில் சௌகரியங்களுள்ள இடத்தில் பயிற்சி சாலை ஏற்பாடு செய்யப்பட்டது. முகாமில் ஏராளமான தொழில் முறைகளும், நடவடிக்கைகளும் நடைபெறுகின்றன. நூற்றுக்கணக்கான தென் இந்திய குடியானவர்கள் இங்கு பயிற்சி பெற்று முதல்தரமான சிப்பாய்களாக மாறி நாகரீகத்துக்கு சத்துருக்களான எதிரிகளை அழிக்கும் வேலையில் ஈடுபடத் தயாராகயிருக்கிறார்கள்.

இந்தப் பயிற்சி முகாமில் நவீன யுத்தத்துக்கு வேண்டிய எல்லாவிதமான முறைகளும் கற்றுக்கொடுக்கப்படுகின்றன. சூரிய உதயம் முதல் சூரிய அஸ்தமனம் வரையிலும் ரெக்ரூட்கள் அணிவகுப்பதும், கவாத்து செய்வதும், ஆயுதங்களை உபயோகிப்பதுமாக பொழுது போக்குகிறார்கள். சிறிய ஆயுதங்களையும், சிறிய பீரங்கிகளையும் தைரியத்துடனும், திறமையுடனும் கையாளக் கற்றுக்கொள்ளுகிறார்கள். ராணுவப் பழக்கம், தேகாப்பியாசம் இவைகளைத்தவிர, உருது, பூகோளம், கணக்கு முதலிய பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன. நல்ல உணவு, சுத்தமான சுகாதாரம் பொருந்திய பொழுது போக்குகள், பயிற்சி முகாமின் ஒழுங்கான ஜீவனம், எல்லாம் சேர்ந்து ஒருவனை நல்ல சிப்பாயாகச் செய்து விடும். இந்த முகாம்களில் ஸ்வாரஸ்யமான ஒரு அம்சமுமிருக்கிறது. பையன்களின் பகுதியொன்றிருக்கிறது. இவர்கள் உடன்காலத்தில் யுத்த சேவைக்கு லாயக்கில்லாதவர்களாகிலும் ஒழுங்குப் பயிற்சியும் சகோதரபாவமும் இவர்களுக்கு ஏற்படுகிறது. அத்துடன் சிப்பாயின் நடையுடை பாவனைகளும் இவர்களுக்குப் பழகி விடுகின்றன. வயது முதிர்ந்தபின் இவர்கள் பட்டாளத்தில் சேர்க்கப்படுவார்கள். இதிலிருந்து பாரம்பரியமாக ராணுவத்தில் சேரவேண்டுமென்ற அவா ஒருவருக்கு ஏற்படுகிறது. இதற்கு ஒரு உதாரணம் கூறுவோம். லெப்டினண்ட் ஒருவர் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளுகிறார். இவருடைய முன்னோர்கள் அநேக தலைமுறைகளாக இந்தப் பட்டாளத்தில் அமர்ந்திருந்தார்கள்.

# இந்திய விமானப் படை.

( அகில இந்தியா ஒலிபரப்பு நிலயம் —மார்ச்சு 31).

1918-ம் வருஷம் ஏப்ரல்மீ 1-ம் தேதியன்று, அதாவது 25 வருஷங்களுக்கு முன்னால் பிரிடிஷ் விமானப்படை அமைக்கப்பட்டது. இதற்கு மூலாதாரம் பிரிடிஷ் கடற்படையைச் சேர்ந்த விமானப் படையும், பிரிடிஷ் விமானப்படை பகுதியும். இவை இரண்டும் சென்ற மகா யுத்தத்தில் கியாதி பெற்றவை. அதே தேதியன்று பத்து வருஷங்களுக்குமுன் மற்றொரு சிறந்த உருவம் தோன்றிற்று. அதாவது இந்திய விமானப்படை. விமானிகளாகிய நமக்கு நாளையதினம் ஒரு விசேஷமான நாளாகும். இந்த விமானப் படை நாளடைவில் விருத்திபெற்று, ஆண்மைத்தனம் பெற்றதை 25 வருஷங்களாக கவனித்துவந்தவர்களெல்லாம் நமக்கு மனமார்ந்த ஆசிகளையும், உத்சாகம் மூட்டக்கூடிய செய்திகளையும் அன்றைய தினம் அனுப்புவார்கள்.

இன்று நான் இந்திய வாலிபர்களுக்கும், இந்திய விமானப்படையில் ஏற்கனவே அமர்ந்திருப்பவர்களுக்கும் ஒலிபரப்புகிறேன். மனித வாழ்க்கையில் பத்து வருஷங்களென்பது சிறிய அளவுதான். நீங்கள் தீரம் பொருந்திய யுத்தவீர சகோதரர்களென்று விமானப் படையிலுள்ள நாங்கள் அறிந்துகொள்ளுகிறோம். பத்து வருஷங்களுக்கு முன் நீங்கள் ஜெனித்தபொழுது உங்களுக்குப் புகழ் ஏற்படுமென்று நாங்கள் வாக்குறுதி செய்தது பலித்து விட்டது. வாலிபப் பருவமுள்ள உங்களிடம் வீரமும், ஆவலும், புத்தி கூர்மையும், உள்ளத்திலுள்ள தைரியத்தையும், தேசாபிமானத்தையும் வெளிக்காட்டவேண்டுமென்ற ஊக்கத்தையும் கண்டு ,நாங்கள் மெச்சுகிறோம். இந்த சிறந்த குணங்களெல்லாம் விமானிகளிடம் குடிகொண்டிருக்கின்றன. 30 வருஷங்களாக இந்த குணங்கள் ஓங்கியிருக்கின்றன.

இந்திய விமானப் படையிலிருக்கும் வாலிபர்களே, பிரிடிஷ் விமானப்படை உங்களுடைய சகோதரனென்று நினையுங்கள். மூத்த சகோதரரான நாங்கள், நீங்கள் எங்களுடன் தோளோடு தோள் நின்று சண்டைபோடுவதைக் கண்டு பெருமையடைகிறோம். நீங்கள் ஒரு சிறந்த படையாகவும், உங்கள் தேசத்தின் பெருமையை நிலைநாட்டுவதாகவும் விருத்தியடைந்துவருகிறீர்களென்றும் கவனிக்க நாங்கள் பெருமை பாராட்டுகிறோம். ஆகிலும் உங்கள் பொறுப்பு இன்றையுடனும், நாளையோடும் நின்றுவிடவில்லை. நீங்கள் மனிதப்பருவமடையும்பொழுது மனிதனுடைய பொறுப்புகளையும் ஏற்றுக்கொள்ளுகிறீர்கள். முற்போக்காளரின் அலுவல்களையும், பொறுப்பையும் நீங்கள் வகிக்கிறீர்கள். இந்த மகத்தான யுத்தத்தில் தங்களிடமுள்ள எல்லாவற்றையும் தியாகம் செய்த ஜனங்களின் ஞாபகக்குறிகளாகவும் இருந்துவருகிறீர்கள். இந்தியர்களுக்கு உபயோகப்படக்கூடிய ஒரு படையைத் தயாரிப்பதிலும் நீங்கள் பங்கு எடுத்துக்கொள்ளுகிறீர்கள். ஆகையால் உங்கள் வாழ்நாட்களை வீணாகக் கழிக்காதீர்கள். உங்கள் முன்னால் சென்றிருப்பவர்களுக்கு நீங்கள் சரியான வார்சுகளென்றும் ருஜுப்படுத்துங்கள். இந்தியாவில் அதின் பாதுகாப்புக்குத் தனிப்பட்ட முறையில் ஒரு விமானப்படை தேவையென்பதை இந்திய ஆண், பெண், குழந்தை ஒருவரும் மறுக்கமுடியாது. ஆகையால் அவர்களுக்குச் சில வார்த்தைகளை விடுக்கிறேன். அவர்களின் உத்சாகத்தினால்தான் இந்த விமானப்படை பலப்படவேண்டும்.

## இந்திய விமானப் படையின் வளர்ச்சி.

நவீன முறைகளின்படி இந்திய விமானப்படையானது சிறியதாயும், அதிக முஸ்தீப்புகளல்லாததாகவுமிருந்தது. இதற்குக் காரணம் இந்தியாவுக்குச் சமீப காலத்தில் பயம் ஏற்படாததும், நேசநாடுகள் ஐரோப்பாவிலும், மற்ற இடங்களிலும் பலமாகச் சண்டை செய்துவந்ததும் ஒவ்வொரு விமானியும், விமானமும் சண்டையில் ஈடுபட்டதும்தான்.

ஒரு வருஷத்திற்குள்ளாக விசேஷ மாறுதல்கள் உண்டாகியிருக்கின்றன. இந்தியாவின் கிழக்கு எல்லைச் சரகத்தில் கொடுமையும், அக்கிரமும் பொருந்திய எதிரி பயமுறுத்துகிறான். கடல்மூலமாக இந்தியாவுக்கு வரும் ஸப்ளைகள் அபாயத்துக்குள்ளாகிவிட்டன. இந்தியாவின் வடமேற்கு மூலைக்கு வந்துவிடுவானோ என்று பயந்திருந்த ஜெர்மானியர்களை ருஷ்யா சமாளித்துத் துரத்தியடித்து வருகிறது. நேசநாடுகளின் பலம் ஓங்கிவருகிறது. எதிரிகளின் பலம் குறைவுபடுகிறது. விமான பலமும் இதேமாதிரியாக இருந்துவருகிறது.

இப்பொழுது பிரிடிஷ் விமானப் படைகள் நவீன விமானங்களிலுள்ள முஸ்தீப்புகளுடன் இந்தியாவுக்கு வந்திருக்கின்றன. இந்திய விமானங்களுக்கும் இந்த முஸ்தீப்புகள் அமைக்கப்படுவதோடு புதிய படைகளும் தயார் செய்யப்படுகின்றன. 1943-ம் வருஷம் முடிவில் விமானப்படை பலம் அதிகமாகிவிடுமென்று நினைக்கலாம். இவைகளுக்கெல்லாம் ஆட்கள்

தேவை. யுத்தம் நடைபெறும்பொழுது ஆகாயத்தில் விமானிகளும் ,விமானத்திலுள்ள இதர வேலைக்காரர்களும் செய்யும் தீரச் செய்கைகளை மட்டும்தான் பொது ஜனங்கள் அறிகிருர்கள். விமானங்களைப் பழுதுபார்த்து நல்ல நிலைமையில் அமைப்பது, வெயர்லஸ் மூலமாக நடவடிக்கைகளை நடத்துவது, கால நிலைமையைப்பற்றி அவர்களுக்கு ஆலோசனை சொல்லுவது, விமானங்களின் எஞ்ஜின்களையும், பீரங்கிகளையும் சரியான நிலைமையில் பாதுகாப்பது, விமானங்களில் வெடி குண்டுகள் ஏற்றுவது, எண்ணெய் டாங்கிகளில் எண்ணெய் நிரப்புவது போன்ற அரிய வேலைகளைச் செய்யும் நிபுணர்களான தரைப் படைகளைப்பற்றி அவர்கள் சிறிதும் அறிகிறதில்லை. இந்த தரைப்படையிலுள்ளவர்கள் விசேஷப்பயிற்சியும், அனுபவமும் வாய்ந்தவர்களாகயிருக்கவேண்டும். அனுபவம் பெறுவதற்கு அநேக வருஷங்களாக பயிற்சியிருக்கவேண்டும். அவர்களுடைய திறமையைப் பொறுத்துத்தான் யுத்தத்தில் விமானப்படையின் வெற்றியும், இழிவும் ஏற்படும். விமானத்தில் செல்லும் வேலைக்காரர்களின் உயிர் நிலையும், தரைப்படையின் உழைப்பையும், நம்பிக்கையையும் பொறுத்தது. இப்பேற்பட்ட மனிதர்கள்தான் எங்களுக்குத் தேவை.

### இந்திய விமானப்படை பயிற்சிப் பகுதி.

பிரதம சிக்ஷையும் உயர்தரமான யந்திரங்களின் அறிவையும் புகட்டக்கூடிய அநேக பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தி, அதற்கு வேண்டிய உத்தியோகஸ்தர்களும் நியமிக்கப்பட்டு முஸ்தீப்புகளும் தயாராகியிருக்கின்றன. சென்ற சில வாரங்களுக்கு முன் அலிகார் சர்வ கலாசாலையில் இந்திய விமானிகளுக்குப் பயிற்சிகொடுக்கும் முறையானது அமுலுக்குவந்தது. இந்த சர்வ சலாசாலையில் இந்திய விமானப்படையில் சேர்ந்து சேவை செய்வதற்கு முன்னதாக மாணுக்கர்கள் விமானப் பயிற்சியில் பிரதம சிக்ஷை பெறுவார்களென்று நாம் நம்புகிருேம்.

ஒவ்வொரு விமானத்திற்கும் ஏராளமான நபர்கள் தரைப்படையாக உதவவேண்டும். யந்திர வேலைக்காரர்கள், சில்லரை வேலைக்காரர்கள், விமானம் கட்டுகிறவர்கள், மின்சார வேலைக்காரர்கள், வெயர்லஸ் ஆப்ரேடர்கள் இன்னும் அநேகர்கள் முதல்தரமான வேலைக்காரர்களாக தேர்ச்சிபெறக்கூடிய புத்தி கூர்மையும், படிப்புமுள்ள அநேக வாலிபர்கள் இந்தியாவிலிருக்கிருர்கள். இந்தியாவிலுள்ள அநேகருக்கு பிரயோஜனமுள்ள உத்தியோகங்களையும் இந்தப் பயிற்சிகள் கொடுக்கக்கூடும். இந்திய விமானப் படை இந்திய வாலிபர்களுக்குப் புத்தி புகட்டக் கூடும். ஆகையால் இந்திய விமானப்படைக்கு உங்களாலியன்ற ஆதரவளியுங்கள்.

உங்களுக்குத் தலைவராகயிருப்பதில் பெருமை பாராட்டுகிறேன்.

இந்திய விமானப்படையிலுள்ள ஆபீஸர்களுக்கும், விமானிகளுக்கும் ஒரு செய்தியை விடுப்பதோடு என்னுடைய சொற்பொழிவை முடித்துக்கொள்ளுகிறேன்.

"உங்களுக்குத் தலைவராகயிருப்பதில் நான் பெருமைகொள்ளுகிறேன். எதிர்பாராதவண்ணம் நீங்கள் திறமை காட்டிவிட்டீர்கள். செய்ததைக்கொண்டு திருப்தியடைந்துவிடாதீர்கள் ; வருங்கால போக்கை கவனியுங்கள். வாலிபம் பொருந்திய நீங்கள்தான் இந்தியாவில் அமைக்கப்படும் விமானப்படைக்கு மூலாதரவு. அக்ரம யுத்தம் நடத்தும் எதிரிகளிடமிருந்து உங்கள் வீடுவாசல்களையும், உங்கள் ஜீவனையும் பாதுகாப்பதற்கும், புகழ்பெற்ற உங்கள் தேசத்தின் தீரத்தையும், பெருமையையும் நிலைநாட்டுவதற்கும் லாயக்கான விமானப்படை ஏற்படுவதற்காக நீங்கள் எடுத்துக்கொண்ட வேலையை மேல் மேலும் அபிவிருத்தி செய்வதும் உங்கள் பொறுப்பேயாகும்".

---

## பாரஸீக வளைகுடாவில் இந்திய ஸாப்பர்களின் இஞ்ஜினியரிங் சாமர்த்தியம்.

### ருஷ்யாவுக்கு உதவி அனுப்ப புது மாதிரியான பாலம் அமைக்கப்பட்டது.

**(டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிகையின் யுத்த நிருபரான ரிச்சர்ட் புஸ்வின் எழுதியது).**

ருஷ்யாவுக்கு இந்தியா செய்துவரும் ஒத்தாசைக்கு அறிகுறியான ஒரு அடையாளத்தை இரண்டு நாடுகளுக்கும் அப்பாலுள்ள ஒரு சிறிய நகரத்தில் கண்டேன். பாரஸீக வளைகுடாவின் அடிப்பக்கத்தில் ஒரு புதிய பாலம் அமைக்கப்பட்டுவிடும். பாலம் கட்டுவதில்

இதுவரையிலிருந்த முறைகளை விட சிலாக்கியமான முறைகள் உபயோகப்படுத்தப் பட்டிருக்கின்றன. இஞ்ஜினியர்களின் புத்தி விசாலமானது யுத்த சேவையில் எப்படி பரிமளிக்கிறதென்றும் இது காட்டிவிடும்.

டைக்கிரஸ் நதியும், யூப்ரேட்டிஸ் நதியும் ஒன்றுசேர்ந்து பாயும் இடத்தில் அவைகளுக்கு ஷாட்டெல் ஆரப் என்று பெயர். இந்த நதிக்கரையில்தான் அமெரிக்காவிலிருந்து வரும் யுத்த தளவாடங்கள் இறக்குமதி செய்யப்பட்டு திரும்பவும் ருஷ்யாவுக்கு அனுப்பப்படுகின்றன.

சாமான் கப்பல்கள் முதல்முதலில் பாஸ்ராவுக்கு வந்தவுடன் படகுகளைச் சேர்த்து ஒரு பாலம் அமைத்து அதன் மூலம் சமான்கள் கொண்டுபோகப்பட்டன. ஷாட்டெல் ஆரப் நதிக்கரையிலுள்ள சாமான் இறங்குமிடங்களெல்லாம் எதிர்த்த கரையிலிருக்கின்றன. சமீபத்தில் இருக்கும் கரையில் சகதி அதிகமாக இருப்பதால் அடிக்கடி சுத்தி செய்ய வேண்டியதாகயிருக்கிறது. படகுகள்பாலம் கட்டுவதற்குத் தேவையான தளவாடங்கள் இல்லாமையால் அங்கிருந்த இஞ்ஜினியரான பிரிகேடியர் கிப்போர்ட்ஹல் என்பவர் இந்தியப் படையிலுள்ளவர்களின் உதவியைக் கோரினார். தாமதமன்னியில் கராச்சியிலிருந்து டஜன்கணக்கான படகுகளைக் கப்பலில் ஏற்றி பாரஸீகத்துக்கு அனுப்பினார்கள். இந்திய சேனையைச் சேர்ந்த 4-வது இஞ்ஜினியரிங் பட்டாளமும் கூடச் சென்றது. இந்தப் பட்டாளத்தில் பஞ்சாப்பைச் சேர்ந்த முஸ்லீம் ஸாப்பர்களும், சீக்கிய பயோனியர் படைகளும் ஹிந்துத் தொழிலாளர்களில் சிலரும் சென்றார்கள்.

பிரிகேடியரின் திட்டப்படி கொண்டுவந்த படகுகளின்பேரில் பலகைகளை நிறப்பி ஒரு பாலம் தயாரித்தார்கள். நதியின் நடுவில் உள்நாட்டு போக்குவரத்துக்காக மட்டும் கொஞ்சம் வழி ஏற்படுத்தியிருந்தார்கள். சாமான் வண்டிகளை இவைகள் மூலம் எதிர்த்த கரைக்குக் கொண்டுபோய் அதன் பிறகு பாரஸீக மார்க்கமாக ருஷ்யாவுக்கு அனுப்பினார்கள். கொஞ்சகாலத்திற்கு இந்தப் பாலம் உபயோகமுள்ளதாகயிருந்தது. பிறகு கடற்படை அதிகாரிகள் டாங்கிகளும் லேசான இருப்புப் பாதைகளும் செல்லக்கூடிய ஒரு பாலம் போட வேண்டுமென்று அபிப்பிராயப்பட்டார்கள். உத்தரவை நிறைவேற்றவேண்டுமென்று அபிப்பிராயம் கொண்ட பிரிகெடியருக்கு இதுசிரமமான காரியமாகத் தோன்றிற்று. வேலை செய்யப் போதுமான தளவாட வசதிகளேயில்லை.

### சாத்யமான காரியம்.

பிரிகேடியர் ஹல்லுக்கு அநேக சிரமங்கள் ஏற்பட்டன. ஒரு மணிக்கு $4\frac{1}{2}$ நாட்ஸ்கள் வேகம் பொருந்திய நதிப் பிரவாகம் ஒன்று. மணிக்கு 70 மைல்கள் வேகமுள்ள காற்றுகளும் அடிக்கடி அடித்துக் கொண்டிருக்கும் நதியின் கரை பாகம் சதுசதுப்பானது. உள்நாட்டு நதிப் போக்குவரவு நடைபெறுவதற்காக 40 அடி உயரத்தில் பாலம் அமைக்கவேண்டியது. வெகு நாட்கள் ஆலோசனை செய்த பிறகு அவர் ஒரு முடிவிற்கு வந்தார். குத்துக்கால்கள் ஊன்றி ஒரு பாலம் அமைத்துவிடுவதென்றும் மத்தியில் இரண்டு உயரமான கோபுரங்கள் அமைத்து 90 அடி அகலமுள்ள ஒரு பாலத்தை அவசியமானபொழுது உயரத் தூக்கிவிடும் படியாக ஒரு ஏற்பாடு செய்வது என்று முடிவு செய்தார். ஆகிலும் இது சிலாக்கியமான ஏற்பாடல்ல. ஆகிலும் அதுதான் சாத்யமான திட்டம். மணிக்கு 70 மைல்கள் வேகம் பொருந்திய காற்றுகளையும் பலமாகயில்லாத கோபுரங்களையும் நினைத்து நினைத்து பிரிகேடியர் மனம் அடிக்கடி கலக்கமுற்றது.

இந்தச் சமயத்திலும் இந்தியத் துருப்புகள் ஒத்தாசை செய்தது. நேராக இருந்து காரியத்தையும் நடைபெறச் செய்தது.

இந்திய ஸாப்பர்களும், பயோனியர் படைகளும் இந்தியாவிலிருந்து வரும் மரங்களையெல்லாம் உபயோகப்படுத்தி அவைகளை இழைத்து ஒன்றுசேர்த்து 40 அடி நீளமுள்ள குத்துக் கால்களை நட்டுவிட்டார்கள். இவைகளை நதியின் தரைமட்டத்துக்குள் இறுத்தினார்கள். இதே மாதிரியாக நூற்றுக்கணக்கான மரங்களைத் தயார் செய்து பூமிக்குள் இறுத்திவிட்டார்கள். மரங்களை இறுக்கும் வேலையைத் தண்ணீருக்குள் இருந்துகொண்டு சுரா மீன்களின் தொந்தரவுக்குட்பட்டும் நடத்தி வந்தார்கள். இந்த வேலை தாமதப்படக் கூடாதென்று நினைத்து ஒரு ஸாப்பர் உயிர் துறந்துவிட்டான்.

இப்பொழுது நதியின் இரு பக்கத்திலிருந்தும் நதியின் மத்திக்குப் பாலமிருக்கிறது. அங்கேதான் அசையும் பாலம் போடவேண்டும். ஆகிலும் அங்கே கோபுரங்கள் அமைத்து புசல் காற்றின் சங்கடங்கள் அனுபவிக்கப் போவதில்லை. பிரிகேடியர் ஹல்லுக்கு ஞானே

தயம் உண்டாகிற்று. ஒரு இரவு அநேக மணிகள் கண்விழித்திருந்து கடைசியில் அமுங்கக் கூடிய ஒரு பாலத்தை அமைப்பதென்று தீர்மானித்தார். இது சுலபமாகத் தோன்றலாம். ஆகிலும், இதுவரையில் உயரத் தூக்கக் கூடிய பாலத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோமே ஒழிய கீழே அமுங்கக்கூடிய ஒரு ஏற்பாட்டைப் பற்றி நான் அறிந்ததில்லை. இந்த பிராந்தியத்தில் உள்நாட்டு போக்குவரவுக்கு 10 அடி ஆழமுள்ள ஜல வசதி இருந்தால் போதும். அமுங்கக்கூடிய பாலம் கட்டுவதில் நதியின் வேகத்தைத் தணிப்பதுதான் மற்றொரு சிரமமான பிரச்னை. இதையும் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைக்க ஏற்பாடு செய்யப்பட்டது. ஸவிஸ்தாரமாகப் பரிசீலனை செய்த பிறகு பிரிகேடியரும் மற்ற இஞ்ஜினியர்களின் நிபுணர்களும் இம்மாதிரியான புதிய பாலத்தை அமைத்துவிடலாமென்று முடிவு செய்திருக்கிறார்கள்.

இந்த பால அமைப்பு வேலையை ஒரு புதிய பொம்மையை சிறு குழந்தை பார்ப்பது போல் பிரிகேடியர் கருதினாலும், அவர் போட்ட திட்டம் நிறைவேற்றப்பட்டு பாலம் முடிவடைந்து வருகிறது. வேலை தளத்திற்குச் சென்று நான் பார்வையிட்ட பொழுது இந்திய 4-வது இன்ஜினியர் படைகளின் உத்ஸாகத்தையும், சோர்வடையாத வலிமையையும் கண்டு களிப்புற்றேன்.

இன்ஜினியரிங் சரித்திரத்தில் ஒரு புதிய பதிவு செய்யப்போகிறோம் என்று இந்திய ஸாப்பர்ஸ்கள் நினைக்கிறார்களென்பதில் சந்தேகமில்லை. என்னுடைய அனுபவத்தில் முதல் தடவையாக ஸீக்கியர்கள் சந்தோஷத்துடன் வேலை செய்வதைக் கண்ணுற்றேன்.

"இது எங்களுடைய பாலம்" என்று அவர்கள் பெருமை கொண்டார்கள்.

---

## ஏ. ஆர். பி. சலனப்படை.

---

இந்தியாவில் பொதுஜன தற்காப்பு வேலையில் ஈடுபட்டவர்களுக்கு சேவைக்கும் தீரத்துக்கும் லாயக்குள்ள புதிய ஏற்பாடுகள் ஏ. ஆர். பி. சலனப் படைகளை உண்டாக்குவதின் மூலம் செய்யப்பட்டு வருகின்றன. இந்தியாவின் பல பாகங்களிலும் இவ்விதமான ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன. டெல்ஹியில் இரண்டு பகுதிகள் தீவிரமான பயிற்சிகள் பெற்று வருகின்றன. பம்பாய், மத்தியமாகாணம், மதராஸ், ஐக்கிய மாகாணங்கள், பஞ்சாப் வடமேற்கு எல்லைமாகாணங்களின் சில நகரங்களில் அநேக சலனப்படைகள் தயாராகிவருகின்றன.

இப்பொழுது வேலைசெய்துவரும் ஏ. ஆர். பி. படையிலிருந்து சிறந்த ஆபீஸர்களும் மனிதர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்கள் ஊதியமன்னியில் வேலை செய்யவேண்டும். இவர்கள் தங்களுடைய சொந்த மாகாணத்திலேயேயிருக்கலாம். அல்லது யுத்த முயற்சியில் அதிகப்பங்கு எடுத்துக்கொள்ள பிரியப்பட்டால் இந்தியாவில் எந்த பாகத்திலும் வேலை செய்ய முன்வரலாம். கூடிய சீக்கிரத்தில் பர்மாவில் வேலைசெய்ய சம்மதப்படுகிறவர்களுக்கு வேண்டிய வசதிகளளிப்பது பற்றியும் யோசனை செய்யப்பட்டுவருகிறது. பர்மாவிலிருந்து வெளியேறுகிறவர்களுக்கும் பிடிபட்ட தளங்களிலுள்ளவர்களுக்கும் பொதுஜன தற்காப்பு முறைகளை அவர்கள் கவனிக்கவேண்டும்.

யுத்த நிலைமையின் மாறுதல்களின் மூலம் விமானப்படையெடுப்பு பயம் நீங்கிவிட மதராஸ் மாகாணத்தின் சில பாகங்கள் பம்பாய், மத்திய மாகாணங்கள், ஐக்கிய மாகாணங்கள், ஒரிஸ்ஸா, ஸிந்து, பஞ்சாப், வடமேற்கு மாகாணங்கள், இவைகளில் புதிய பொதுஜன தற்காப்பு முறைகள் ஏற்படுத்துவதின் மூலம் ஏ. ஆர். பி. சலனப்படை உண்டாகியிருக்கிறது.

### ஏ. ஆர். பி. சிக்கனமும், பாதுகாப்பும்.

இந்த மாகாணங்களில் ஒவ்வொரு நகரத்திலும் விரிவானமுறையில் ஏ. ஆர். பி. ஏற்பாடுகள் அவசியமில்லாததால் ஏ. ஆர். பி. சலனப்படைகளை அமைத்து அதன் மூலம் ஏ. ஆர். பி. ஏற்பாடுகளில் செலவிடப்படும் செலவைக் கூடுமானவரையில் குறைவுபடுத்தவும், யுத்தப் போக்கில் வருங்காலத்தில் ஏற்படப்போகும் மாறுதல்களுக்கு உபயோகமுள்ளவகையில் ஏற்பாடுசெய்ய பயிற்சிபெற்ற வேலைக்காரர்களை அமைக்கவும் முடிவுசெய்திருக்கிறது. தேவையான ஆட்களைப் பொருக்கி நகரங்களில் கூட்டி கடுமையான பயிற்சியளிக்கப்படும். பொதுஜன தற்காப்பு முறைகளில் சம்பந்தப்பட்ட எல்லாவிதமான சேவைகளையும் செய்ய அவர்கள் பயிற்சி பெறுவார்கள். உதாரணமாக நெருப்பணைக்கும் படையினர் அவசியமானால் முதலுதவி செய்யும் பணியையும் ஆபத்திலிருப்பவர்களுக்குச் சகாயம் செய்யும் வேலையையும் செய்யப்படவேண்டும். இந்தப் படையைச் சேர்ந்தவர்களை ஒரு மாகாணத்தில் அபாயத்துக்

குட்பட்டிருக்கும் பிரதேசத்துக்கு அவசியமானால் அனுப்புவார்கள். அங்கே தயாராக வேண்டிய படைகளுக்கு இவர்கள் அடிப்படையாக யிருப்பார்கள்.

சலனப்படைக்கு ஆட்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாணங்களிலெல்லாம் ஏ. ஆர். பி. வேலைக்காரர்களில் பெரும்பான்மையோர் இந்தியாவில் எந்த பாகத்திற்கும், பர்மாவுக்கும் சென்று சேவை செய்யத் தயாராகயிருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஆகையால் அபாயத்துக் குட்படாத மாகாணங்களிலிருந்து தேவையானால், எதிரியின் விமானப்படையெடுப்பு பயத்துக்குட்பட்ட வங்காளம், அஸ்ஸாம், பீகார் மாகாணங்களுக்கு அவர்களை அனுப்பக்கூடும்.

இந்த ஏ. ஆர். பி. சலனப்படைக்கு டாக்டர். P. G. ஹார்ஸ்பர்க் என்பவர் தலைமை வகிப்பார். அவர் லண்டனிலும் மிட்லாந்து பிரதேசத்திலும் மின்னல் படையெடுப்பு சமயத்தில் ஏராளமான சேவை புரிந்திருக்கிறார். லாகூரிலும், பம்பாயிலும் பொதுஜன தற்காப்புகளில் நிபுணர்கள் பயிற்சி பள்ளிக்கூடங்களை ஸ்தாபித்தவர் இவர்தான்.

---

# மாதத்திற்கு 500 இயந்திரங்கள்.

## இந்திய அரசாங்கத்தாரின் திட்டங்கள்.

இந்தியாவில் முதல்தரமான இயந்திரங்கள் உற்பத்தி தொழிற்சாலையை நிர்மாணம் செய்ய இந்திய ஸப்ளை இலாகா போட்டிருக்கும் திட்டம் நடைபெறுவதற்குச் சாதகமாக பிரிடனிலிருந்து இரண்டு உயர்தர இயந்திர நிபுணர்கள் வந்திருக்கிறார்கள். பிரிடனில் இயந்திரங்கள் தொழிற்சாலையில் சம்பந்தப்பட்டவரும் ரோஜர் தூது கோஷ்டிக்கு இயந்திர வேலை ஆலோசகராக முதல் முதலில் இந்தியாவுக்கு வந்தவருமான மிஸ்ட்டர் S. ஒல்ட்பீல்ட் ஒருவர். அநேக வருஷங்கள் உற்பத்தி இலாகா இஞ்ஜினியராகவும் பிறகு பிரிடனில் இயந்திரங்கள் உற்பத்தி செய்யும் கியாதிபெற்ற தொழிற்சாலையில் இயந்திர ஆயுதங்கள் உற்பத்தி திட்டங்களை நிறுவியவருமான மிஸ்ட்டர் டிரப்ஷா மற்றொருவர்.

ஸர்க்கார் திட்டப்படி ஐந்து தொழிற்சாலைகளில் ஒவ்வொன்றிலும் ஒரு மாதத்திற்குள் 100 முதல் 125 உயர்தரமான இயந்திரங்களை உற்பத்தி செய்யவேண்டும். அதாவது இந்தியா பூராவிலும் ஒரு மாதத்திற்குள் 500 இயந்திரங்கள் தயாராக வேண்டும். இவை மூன்று வகைப்படும். முதல் தரம், இரண்டாம் தரம், மூன்றாம் தரம். இந்தியாவின் தற்போதைய உற்பத்தி மாதம் ஒன்றுக்கு 275 இயந்திரங்கள் வீதம் செய்யப்படுகிறது.

---

# கல்மாறி பொழிந்தார்கள்.

உயர்தரமான யந்திரங்களைக்கொண்டு யுத்தம் நடைபெறும் இந்நாளில் பிராசீன காலத்தில் வீரர்கள் உபயோகப்படுத்திய கவான் கல்லுகள் உபயோகப்படுத்தப்பட்டன என்பது ஆச்சரியமாகயிருக்கிறது. ஆகிலும் சமீபகாலத்தில் பர்மாவில் மாயூ நதிக்குக் கிழக்கில் நேசதேச ரோந்துப்படைகள் வெற்றிகரமாகக் கல்மாறி பொழிந்திருக்கின்றன.

எதிரி அடர்ந்த புதற் காடுகளில் ஒளிந்துகொண்டிருந்தான். அவர்களிருக்குமிடத்தை ரோந்துப்படைகள் கண்டுபிடிக்க முடியவில்லை. அவர்கள் சரமாறியாக கற்களை வர்ஷித்து ஜப்பானியர்களுக்குத் தொந்தரவு செய்ததை சஹிக்க முடியாமல் ஜப்பானியர் சுட ஆரம்பித்தார்கள். அதன் மூலம் அவர்கள் ஒளிந்திருந்த இடம் கண்டுபிடிக்கப்பட்டது.

ரோந்துப்படைகள் தன்னுடைய காரியங்களை வெற்றிகரமாக முடித்துக்கொண்டன இதிலிருந்து, காடுகளில் யுத்தம் புரிவதில் வெற்றியானது தந்திரசாலிகளுக்குத்தான் என்பது மறுபடியும் தெளிவாகிவிட்டது.

---

## மாயூ மலைகளில் காயம்பட்டவனைத் தூக்கிச்செல்லுவதற்கு 8 பேர்கள் வேண்டும்.

அரக்கான் போர்முனையில் காயம்பட்டவர்களைத் தூக்கிச் செல்லுகிறவர்களின் கஷ்டங்களை அறியவேண்டுமானால் ஒருவனை எட்டுப்பேர்கள் தூக்கிச் செல்லவேண்டுமென்பதை கவனித்

தாலே போதும். உபரி நபர்கள் மாயூமலைகளின் செங்குத்தான சரிவுகளில் தூக்கிச் செல்லுகிறவர்களுக்கு உபபலமாக யிருக்கிறார்கள்.

"எவ்வளவு சிரமமிருந்தாலும் காயம்பட்டவர்களை அவசியம் கொண்டுவரவேண்டுமென்று அவர்களுக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. காயம்பட்டவர்களைக் கண்டுபிடிப்பதில் எவ்வளவு இடையூறுகள் இருந்தாலும் அதை பொருட்படுத்த மாட்டார்கள்.

ஜப்பானியர்கள் இப்பொழுது கபடமாக முன்னேறிவரும்பொழுது காயம்பட்டவர்கள், தூக்கிச்செல்லுகிறவர்கள் ஜப்பானியர்கள் வசம் அகப்பட்டுக்கொள்ளவும்கூடும். ஆகிலும் அரியசேவையில் ஏற்பட்டிருக்கும் இந்த மனிதர்கள் அபாயத்தைப் பொருட்படுத்துவதில்லை.

---

# கடலில் செல்லாத கப்பல்கள்.

## 'கல் கோட்டைகள்'.

கடலில் செல்லாத கப்பல்கள் இந்திய விமானப்படையில் யுத்த சேவையில் முக்கியமான பங்கு எடுத்துக்கொண்டிருக்கின்றன.

கடற்படை பாஷையில் கல்கோட்டைகள் என்று சொல்லக்கூடிய இவைகள் தரையில் இருக்கும் ஸ்தாபனங்கள். ஆபீஸுகள், சிப்பாய்கள் வசிக்குமிடங்கள், சாமான் கிட்டங்கிகள், பயிற்சி அளிக்கும் கட்டடங்கள் கொண்டவைகள்.

இதேமாதிரியாக ஒவ்வொரு முக்கியமான இந்தியத் துறைமுகத்திலும், இந்தியக் கடற்படையின் தரை ஸ்தாபனம் கடற்படை ஆபீஸரின் அமுலுக்குட்பட்டு ஸ்தல சந்நிவேசத்துக்கு அனுகுணமான பயிற்சிகளை அளித்துவருகிறது. பயிற்சி ஸ்தாபனங்களுக்கு அவைகளின் அலுவல்களுக்குத் தகுந்தபடி நாமதேயம் கொடுக்கப்பட்டிருக்கிறது. வால்சுரா என்பது சுராமீன் என்று பொருள்படக்கூடிய தென்இந்திய வார்த்தையின் தொடர்புச்சொல். கடற்படையின் மீன்வெடி பள்ளிக்கூடத்திற்கு இந்தியக் கப்பல் வால்சுரா என்று சொல்லுவது பொருத்தமான பெயர். இந்தியக் கப்பல் பகதூரும், டிலவேரும் கராசியிலுள்ள பயிற்சி அளிக்கும் சர்வகலாசாலைகள். இங்கு ஊக்கமுள்ள மாலுமிகள் தயார் செய்யப்படுகிறார்கள்.

பிரிடிஷ் கடற்படையிலும் கரையிலுள்ள ஸ்தாபனங்களுக்கு H. M. S. என்ற எழுத்துக்கள் சேர்க்கப்பட்டு பெயர் வழங்கப்படுகின்றன. இந்தியக் கடற்படையிலும் இதேமாதிரியாகத்தான் சொல்லப்படுகிறது. இதற்குக் காரணம், தரையில் வேலை செய்யும் கடற்படை உத்தியோகஸ்தர்கள் கப்பலைச்சேர்ந்தவர்கள். இல்லாவிடில் கடற்படை சட்டதிட்டங்களுக்கு அவர்கள் உட்படமாட்டார்கள்.

டெல்கியிலும், பம்பாய் கடற்கரையிலும் வேலை செய்யும் கடற்படை அதிகாரிகள் டெல்ஹௌஸி என்னும் இந்தியக் கப்பலைச் சேர்ந்தவர்கள். சென்ற யுத்தத்தில் இந்தக் கப்பல் அரிய சேவை செய்தது. இப்பொழுது பயிற்சி அளிப்பதற்கு மட்டும் உபயோகப்படுகிறது. இந்தக் கப்பலைச் சேர்ந்தவர்களென்றும் சொல்லப்படும் ஆபீஸர்களும், மற்ற ஆட்களில் ஒரு சிறிய பங்கும்தான் இந்தக் கப்பலில் செல்லக்கூடும்.

இதேவிதமாக பிரிடனில், கடற்படை இலாகா ஆபீஸர்களும், முக்கியமான வேலையில் ஈடுபட்டிருக்கும் அநேகரும் பிரஸிடெண்டு என்னும் கப்பலைச் சேர்ந்தவர்கள். பிரிடிஷ் கடற்படையின் வாலண்டியர் ரிஸர்வ் பகுதியில் லண்டனிலுள்ள பகுதிக்கு இந்தக் கப்பல்தான் தலைமை காரியாலய ஆபீஸ்.

கடற்படை சரித்திரத்தில் தனிப்பட்ட ஸ்தலங்களில் கடற்படை இலாகா அதிகாரிகள் தாத்காலிகமாக வசிப்பதிலிருந்து பிரிடிஷ் கடற்படை விலாசமுள்ளதாகச் சொல்லப்படுகிறது. சென்ற மகா யுத்தத்தில் லண்டனிலுள்ள கிரிஸ்டல் அரண்மனைக்கு H. M. S. கிரிஸ்டல் பாலஸ் என்று பெயர் வழங்கப்பட்டது. ஏனென்றால் பிரிடிஷ் கடற்படை உத்தியோகஸ்தர்கள் அங்கு வசித்துவந்தார்கள்.

இந்த யுத்த ஆரம்பத்தில் "கடலில் செல்லாத இந்த கப்பல்களைப்பற்றி" பரிகசிக்கத்தக்க சில பிரசாரங்களை ஜெர்மானியர்கள் செய்துவந்தார்கள். ஒரு சமயத்தில் தரையிலிருந்த ஒரு முக்கியமான கடல் ஸ்தாபனம் மூழ்கிவிட்டதென்று வெளியிடப்பட்டது. இவ்விதம் நடைபெற வேண்டுமானால் தரைப்பிரதேசம் பாதாளத்துக்குள் அமுங்கிவிடவேண்டும்,

# மஸ்கிடோ விமானம்.

## உலகத்திலேயே அதிக வேகமுள்ளது.

பெர்லின் நகரத்தை முதல்முதலில் பகலில் தாக்கிய மரத்தினுல் செய்யப்பட்ட பிரிட்டனுடைய கியாதிபெற்ற மஸ்கிடோ விமானம் பிரிட்டனிலிருந்து காலையில் புறப்பட்டு ருஷ்யாவுக்குச் சென்று சாயங்காலம் மறுபடியும் திரும்பிவந்துவிட்டது. பிரிட்டனிலிருந்து மால்டாவுக்கு ஒரு சாயங்காலம் சென்று திரும்பிவிடும்.

மஸ்கிடோ விமானம் உலகத்திலுள்ள எல்லா விமானங்களையும்விட அதிக வேகமுள்ளது. இதன் வேகத்தைப்பற்றி தகவல்கள் கொடுக்க முடியவில்லை. ஆகிலும், ஹோம்கௌன்டிகளிலுள்ள டிஹாவிலாந்து விமான உற்பத்திசாலைக்கு பத்திராதிபர்களின் கோஷ்டி ஒன்று சென்றபொழுது அதிகார வர்க்கத்தார் மஸ்கிடோ விமானத்தின் அமைப்பைப் பற்றிய சில குறிப்புகள் வெளியிட்டார்கள்.

இந்த விமானத்தில் 20 மிலிமிடர் வாயகலமுள்ள 4 பீரங்கிகளும், 4·303 மிலிமிடர்களுள்ள மெஷின் பீரங்கிகளும், முன் பக்கத்தில் சேர்ந்தாற்போல் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒரே சமயத்தில் சுடுவதற்கு வசதியேற்பட்டிருக்கிறது. இந்த விமானம் 2,000 பவுண்டுகள் எடைமானமுள்ள வெடிகுண்டுகளை ஏற்றிச்செல்லும். ஒரே தடவையில் ஜெர்மனி பூராவையும் சுற்றிவிட்டுத் திரும்பிவிடும். இதற்கு ஒப்பிடக்கூடிய ஒரு விமானமும் ஜெர்மானியரிடம் இல்லை. இதற்குச் சமமாக மெஸ்ஸர்ஸ்மிட் 40 விமானத்தை ஒருவாறு சொல்லலாம். அதிக வேகமாகச் செல்லும் புதிய தினுசு விமானங்கள் கட்டப்பட்டு முடிவடையும் வரையில் மஸ்கிடோ விமானம்தான் முதல்தரமானது.

யுத்தம் துவங்கியதுமுதல் உற்பத்தி செய்யப்பட்டு எதிரியைத் தாக்குவதில் விசேஷமாக உபயோகப்படுத்தப்பட்ட விமானங்களின் மஸ்கிடோ ஒரு புதுமாதிரி விமானம். இதற்கு திட்டம்போட ஆரம்பித்து 22 மாதங்களுக்குள்ளாகவே இது உலகத்திலேயே பெரும் புகழ் பெற்றுவிட்டது.

# காகித உபயோகத்தில் சிக்கனம்.

## அரசாங்க முறைகள்.

காகிதக் குறைவு ஏற்பட்டுவிட்டதால் எல்லா அரசாங்க இலாகாக்களிலும் 30 முதல் 75 சதவிகிதம் காகித உபயோகமானது இவ்வருஷத்தில் குறைக்கப்பட்டிருக்கிறது. காகித உபயோகத்தில் பூராவாக 5,000 டன்கள் எடைமானமுள்ள காகிதம் குறைவுபட்டிருப்பதுடன், எழுத்து வேலைகளுக்கு உபயோகப்படும் காகிதத்தில் 50 சத விகிதமும், சிறியதும், பெரியதுமான லகோடாக்களில் 75, 50 சத விகிதமும், மை ஒத்தும் காகிதத்தில் $33\frac{1}{3}$ சத விகிதமும் குறைவுபட்டிருக்கிறது.

மத்திய அரசாங்கம், மாகாண நிர்வாகம், இந்திய ஸமஸ்தானம் இவைகளின் தேவைகளெல்லாம் சாமான்களின் கண்ட்ரோலரின் மூலம் ஸப்ளை செய்யப்படும். அவர் பிரசுரங்கள் சம்பந்தமாக கடுமையான பரிசீலனை செய்துவருகிறுர். அனுவசியமான பதிப்புகளை ரத்து செய்து விடுகிறுர். அச்சிடப்படும் பத்திரிகைகளின் சங்கியையையும் அதன் பரிமாணத்துக்குக் குறைத்து விடுகிறுர். காகித உபயோகத்தை சிக்கனப்படுத்துவதற்கு வேண்டிய எல்லா முறைகளையும் அனுஷ்டிக்கும்படிக்கும் மாகாண அரசாங்கத்தார்களுக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது.

### இன்ஸ்பெக்டர்கள் சொல்லும் சிக்கன முறைகள்.

கண்ட்ரோலருக்கு ஒத்தாசையாகயிருக்கும் நான்கு இன்ஸ்பெக்டர்களும், ஆபீஸுகளுக்குச் சென்று, சிக்கன முறைகளைக் கூறியும் அவைகளை அனுஷ்டிக்கும் படியாகவும் வற்புறுத்துகிறுர்கள். பிரதிகள் ஏராளமாகயிருப்பதற்குப் பதிலாக அச்சிடப்படவேண்டும் என்பது ஒரு முறை. இதன் மூலம் காகிதச் சிக்கனமும் எழுதும் காகிதத்தின் லாபமும் உண்டாகும். ஆபீஸ்களில் உபயோகிக்கப்படும் அச்சுபாரங்கள் குறைக்கப்படுகின்றன. அல்லது சுருக்கப்படுகின்றன. காகிதங்களின் தரமும் மலிவானதும் சாதாரணமானதுமான காகிதங்களின் உபயோகத்துக்கு வந்துவிட்டது.

பாதுகாப்பு இலாகாக்களும் தபால், தந்தி இலாகாக்களும் இலாகா சம்பந்தமான பாரங்களைக் குறைப்பதற்கு ஏற்பாடு செய்து வருகிறார்கள். அரசாங்கத்தாரின் பிரசார இலாகாக்களுக்கு காகித ஸப்ளை அளவிடப்பட்டு பங்கிடப்பட்டிருக்கிறது. இதைக்கொண்டு தான் அவர்கள் பிரசுரங்களை வெளியிடவேண்டும்.

## காகித உற்பத்தி.

வருஷாந்திர விமர்சனங்களும், ரிபோர்ட்டுகளும் பிரசுரிப்பதை நிறுத்திவிட்டார்கள். அல்லது குறைவான பதிப்புகள் அச்சிடப்படுகின்றன. அல்லது அவைகளின் சாராம்சம் மட்டும் அச்சிடப்படுகிறது. இந்தக் கட்டுப்பாடு அதிகரிக்கப்படும். சில ஷரத்துகளுக்குட் பட்டு அவசியமில்லாத பேபர்கள் சம்பந்தமான நடவடிக்கைகள் ஆறுமாத காலத்திற்கு ஒத்தி வைக்கப்படும்.

கைவசமிருக்கும் யந்திர வசதிகளின் சக்தியைப்பொறுத்து காகித உற்பத்தியானது அதிகரிக்கப்பட்டிருக்கிறது. உற்பத்திக்கும், செலவுக்குமுள்ள வித்தியாசம் மறையவேண்டு மானால் காகித உபயோகத்தில் சிக்கன முறைகளைக் கையாளவேண்டியது அவசியமாகும்.

அரசாங்கத்தாரின் உபயோகம் குறைந்து விட்டால் பொதுமக்களின் உபயோகத்திற்கு தாராளமான ஸப்ளையானது இந்தியாவின் யந்திரசாலைகளிலிருந்து அனுப்பப்படலாம். இந்தியாவின் உற்பத்தியில் 30 சத விகிதம் பொதுஜன உபயோகத்துக்குத் தேவையாயிருக் கிறது. ஆகிலும் பொதுஜனங்களின தேவைக்குப் போதுமான அளவு ஸப்ளை செய்ய இயலாது. ஆகையால் அவசியமான காரியங்களுக்கு மட்டும்தான் காகிதங்கள் உபயோகப் படவேண்டும்.

அரசாங்கத்தார் காகிதப் பங்கீடு நியாய முறையில் நடைபெறவேண்டுமென்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளத் தயாராகயிருக்கிறார்கள். இவ்விதமான பங்கிடு ஏற்படவேண்டுமானால் வியாபார ஸ்தலங்களும், பொதுஜன இயக்கங்களும் ஸொஸைடி களும், சங்கங்களும், பள்ளிக்கூடங்களும், ஒவ்வொரு குடும்பத்தாரும், தனிப்பட்ட ஒவ்வொரு வரும் ஒத்துழைக்கவேண்டியது அவசியம். நாம் இப்பொழுதே தீவிரமான முயற்சிகள் செய்துவிட்டால், இங்கிலாந்திலும் மற்ற நாடுகளிலும் காகித உபயோக விஷயத்தில் போட்டிருக்கும் கடுமையான கட்டுப்பாடுகளை நாம் தவிர்த்து விடலாம்.

## காகிதம் சேமிப்பு ஏற்பாடுகள்.

வீணாய்ப்போகும் காகிதங்களின் ஒரு டன் எடைமானமுள்ள சேமிப்பிலிருந்து விமானங் களைச் சுடும் குண்டுகளின் கூடுகளில் 100-ஐயும் 600 வெடி குண்டுகளின் உள்ளே வைக்கப் படும் சாமான்களாகவும், 7,500 பீரங்கிகளுக்கு நெருப்பு வைக்கும் சாதனமாகவும், பீரங்கிக் குண்டுகளுக்கு அடியில் போடும் 11,000 சுரையாகவும் தயார் செய்து விடலாம்.

பேபர் உற்பத்தி கண்டுபிடித்த நாள் முதற்கொண்டு காகிதத்தின் பலவேறு உபயோகங் களைப்பற்றி இவ்வளவு மும்முரமான சர்ச்சையானது இப்பொழுது நடப்பதுபோல இது வரையில் நடைபெறவில்லை. காகித உபயோகம் அதிகரித்துவிட்டதும் வீணாய்ப்போன காகிதங்களை யுத்த வெடி மருந்துகளுக்கு உபயோகிப்பதும்தான் இந்த சர்ச்சைக்குக் காரணங்கள்.

உபயோகமற்ற காகிதத்தை யுத்த முறைகளுக்கு மட்டும் 18 வகைகளில் உபயோகப் படுத்தலாமென்று நிபுணர்கள் கண்டுபிடித்துவிட்டார்கள். காகித மில்லுகளுக்கு அவைகள் இயற்கைப் பொருள்களாக உபயோகப்படக்கூடும். மில்லுகளில் இவைகளைப்போட்டு விட்டால், புதிய காகிதங்களைத் தயார் செய்யவேண்டிய முறைகளெல்லாம் இவைகளுக்குத் தேவையில்லை.

காகிதங்களைக் கண்டபடி உபயோகிக்காமலிருப்பதற்காக, அநேக விதமான சிக்ஷைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. உபயோகமற்ற காகிதங்கள் மறுபடியும் காகித மில்லுகளுக்குப் போய்ச் சேரும்படியாகவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. சிறியதொரு காகிதத்தை யும் தீ மூட்டிப்பொசுக்கினால் இது இங்கிலாந்தில் 100 பவுன்கள் அபராதம் விதிக்கக்கூடிய குற்றமாகும்.

இந்தியாவில் காகிதத்தை அனாவசியமாக உபயோகப்படுத்துவதைத் தடுக்கும் விஷயத் தில் அநேக முறைகள் கையாளப்படவேண்டும். இந்தியாவின் பிரச்னையானது இறக்குமதிகள் குறைந்துவிட்டதை சரிப்படுத்தும் முறையில் உள்நாட்டு உற்பத்திகளை அதிகரிப்பது மட்டு மல்ல. நிர்வாக இலாகாவிலும், உற்பத்தி இலாகாவிலும் யுத்தத்தினால் அதிகமாகத்

தேவையாயிருக்கும் காகித உபயோகத்தை எப்படி ஈடுகொடுப்பது என்பதும் தான். உற்பத்தியையும் தேவைகளையும் சரிக்கட்டவேண்டுமானால் காகித உபயோகத்தை கவனித்து நடத்தவேண்டும். அதாவது இருப்புக்குத் தகுந்தபடி செலவிடவேண்டும். உபயோகமற்ற காகிதங்களையும் தொழிற்சாலைகளுக்குத் தவராமல் அனுப்பிவிடவேண்டும்.

### காகித சேமிப்புப் பைகள்.

சிகரெட் உற்பத்தி செய்பவர்களெல்லாம் வியாபாரிகளிடமிருக்கும் காகிதப்படங்களை வாபஸ் செய்யும்படி கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். உதிரிக் காகிதங்களில் கட்டப்பட்ட சிகரெட் பாக்கட்டுகளை அங்கீகாரம் செய்யவேண்டுமென்றும், வியாபாரிகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதுவரையில் அவசியமில்லாத போனால் ஒளித்துவந்த பிரசுரங்களும் அறிக்கைகளும் பத்திரப்படுத்தப்பட்டு வருகின்றன. அவைகளை காகித ஆலைகளுக்குக் கொண்டுபோய் அவைகளின் ஸ்வரூபம் தெரியாமல் காகிதமாகமாறும் வரையில் ஆலைகளில் உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டு கவனித்து வருகிறார்கள்.

### நியாயமான காகிதப் பங்கீடு செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள்.

வருங்காலத்தில் இந்தியாவில் இறக்குமதி செய்யப்படும் பத்திரிகைக் காகித ஸப்ளைகளைச் சமமாக எல்லா பத்திரிகைகளுக்கும் பங்கிட்டுக் கொடுப்பதற்காக இந்திய கவர்ன்மெண்டார் கெஜெட் விசேஷ அனுபந்தம் போட்டு 1941-ம் வருஷத்திய பத்திரிகைக் காகித அமுலைத் திருத்தி பத்திரிகைக்காரர்கள் தனிப்பட்ட முறையில் இறக்குமதி செய்யும் காகிதங்களை ஸர்க்கார் கைப்பற்றவும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

---

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 147. (1-வது பிரிவு).

| | | | |
|---|---|---|---|
| 22- 5-43 | கோனாபட்டு | ... மாலை | 7.00 |
| ,, | வெங்களூர் | ... ,, | 7.30 |
| 23- 5-43 | கீழாநிலை | ... ,, | 7.00 |
| ,, | கீழாநிலை புதுப்பட்டி | ... ,, | 7.30 |
| 24- 5-43 | பெருமாநாடு | ... ,, | 7.00 |
| ,, | புல்வயல் | ... ,, | 7.30 |
| 25- 5-43 | சடயம்பட்டி | ... ,, | 7.00 |
| 25- 5-43 | ஒலியமங்கலம் | ... மாலை | 7.30 |
| 26- 5-43 | மலைக்குடிப்பட்டி | ... ,, | 7.00 |
| ,, | துலையானூர் | ... ,, | 7.30 |
| 27- 5-43 | மலம்பட்டி | ... ,, | 7.00 |
| ,, | பொரம்பூர் | ... ,, | 7.30 |
| 28- 5-43 | ஆலவயல் | ... ,, | 7.00 |
| ,, | அம்மன்குரிச்சி | ... ,, | 7.30 |

### பிரஸங்கம் 148. (2-வது பிரிவு.)

| | | | |
|---|---|---|---|
| 29- 5-43 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை | 6.00 |
| 30- 5-43 | கீரனூர் | ... ,, | 7.00 |
| ,, | நாஞ்சூர் | ... ,, | 7.30 |
| 31- 5-43 | பூவரசகுடி | ... ,, | 7.00 |
| ,, | வேங்கடகுளம் | ... ,, | 7.30 |
| 1- 6-43 | பெருங்களூர் | ... ,, | 7.00 |
| ,, | ஆதனக்கோட்டை | ... ,, | 7.30 |
| 2- 6-43 | மிரட்டுநிலை | ... மாலை | 7.00 |
| ,, | அரிமளம் | ... ,, | 7.30 |
| 3- 6-43 | பூங்குடி | ... ,, | 7.00 |
| ,, | சத்தியமங்கலம் | ... ,, | 7.30 |
| 4- 6-43 | உடையாளிப்பட்டி | ... ,, | 7.00 |
| ,, | கிள்ளுகோட்டை | ... ,, | 7.30 |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | |
|---|---|
| 22— 5—43 | வெட்டம்விடுதி. |
| 23— 5—43 | மருதன்கோன்விடுதி. |
| 24— 5—43 | முள்ளங்குரிச்சி. |
| 25— 5—43 | கோனாபட்டு. |
| 26— 5—43 | ராயவரம். |
| 27— 5—43 | குழிபிறை. |
| 28— 5—43 | புதுக்கோட்டை. |
| 29— 5—43 | பொன்னமராவதி. |
| 30— 5—43 | ஏம்பல். |
| 31— 5—43 | கொன்னையூர். |
| 1— 6—43 | ராமச்சந்திரபுரம். |
| 2— 6—43 | கீழாநிலை புதுப்பட்டி. |
| 3— 6—43 | ஆலங்குடி. |

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,000—25-5-43.